In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவசுந்தரி

மாலை-6 : மலர்-1 மே- 2013 – சித்திரை தமிழ் தெய்வீகத் திங்கள் இதழ்

விலை
ரூபாய் 10/-

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்

ஸ்வஸ்திஸ்ரீ விஜய வருடம் சித்திரைத் திங்கள் 21ம் தேதி 4.05.2013 சனிக்கிழமை

69வது பிறந்த நாள் விழா காணும்

திருமிகு. **சாமி. சுப்பையா ஸ்தபதியார்** அவர்களும்

அவரது துணைவியார் திருமதி. **மல்லிகா** அவர்களும் அவர்தம் குடும்பத்தினர்

S. விஷ்ணுராமன் - V. லதா, S. சுவாமிநாதன் (சிவா) - S. ஜெயப்பிரீதி,

R. நாகராஜன் - N. ரமாதேவி, V. யோகஸ்ரீ, N. பிரியதர்ஷிணி, V. ஹேமமாலினி

S. லோகேஷ் S. மாதங்கி

ஆகிய யாவரும் ஸ்ரீ ஏலவார் குழலி உடனாய ஏகம்பரநாதர் அருளாலும்,
மதுரை மீனாட்சி அம்பிகை உடனாய சோமசுந்தரேசர் அருளினாலும்.
இனிய மேலான நல்வாழ்வுடன் நீடிய ஆயுளும் நிறைந்த செல்வமும் பெற்று
பல்லாண்டு வாழ்க என வாழ்த்தி மகிழ்கிறோம்.

அன்புடன் **சிவசுந்தரி**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

C.S.S.

சிவசுந்தரி

மாலை-6 ❀ மே-2015 - சித்திரை ❀ மலர் -1

- திருச்சிற்றம்பலம் -

உருத்திரனை உமாபதியை உலகுஆனானை
உத்தமனை நித்திலத்தை ஒருவன்தன்னைப்
பருப்பத்தைப் பஞ்சவடி மார்பினானைப்
பகல் இரவாய் நீர்வெளியாய்ப் பரந்து நின்ற
நெருப்புஅதனை நித்திலத்தின் தொத்து ஒப்பானை
நீறு அணிந்த மேனியராய் நினைவார் சிந்தைக்
கருந்தவனைக் கஞ்சனூர் ஆண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டு உய்ந்தேனே - திருநாவுக்கரசர்

மேலான வழியில்செலுத்துபவனும்,உமையின் கணவனாக இருப்பவனும், உத்தமனும், முத்துப் போன்றவனும், அழிவில்லாத ஒருவனும் பஞ்சவடத்தை மார்பில் அணிந்த கபாலியாக இருப்பவனும், பகல்,இரவு,ஆகாயம்,காற்று, நீர்,நெருப்பு என ஆத்மபூதங்களாக இருப்பவனும், திருநீற்றை அணிந்து தன்னைத் தியானிப்பவர் சிந்தையில் நீங்காது இருப்பவனும், கஞ்சனூர் என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமானும், தம்மை அடைந்தவர்கள் வேண்டியதை விரும்பியவாறு அளிக்கும் கற்பகமரமாக இருப்பவனும் ஆகிய பெருமானைக் கண்ணாரக் கண்டு மகிழ்கிறேன் என்கிறார் நாவுக்கரசர்.

கற்பகவல்லி தழுவி நிற்கும் கபாலிநாதனைக் கண்டு தொழுது அவனிடம் நம்மை மேன்மை மிக்க வழியில் செலுத்துமாறு பிரார்த்தித்துக் கொண்டு, இனிய ஆறாம் ஆண்டில் அடியெடுத்து வைத்து, நமது பயணத்தைத் தொடர்வோம்.

இந்த இனிய வேளையில் அன்பர்கள் யாவருக்கும் மயிலை வளர் கற்பகவல்லியும் அவளது காதலன் கபாலிநாதனும் சகல செல்வ யோக மிக்க பெரு வாழ்வை அளித்து அளித்து இன்பமுடன் வாழ்விக்க வேண்டுமென்று பணிந்து வேண்டிக்கொள்ளுகின்றேன். நலம் சூழ!

இனிய அன்புடன்,

வாழி நலம் சூழ,

பூசை. ச. ஆட்சிலிங்கம்

முகவரி:
ப.எண். 29,பீமன்ன முதலி கார்டன் தெரு,
ஆழ்வார்ப்பேட்டை, சென்னை-18 . அலைபேசி 9941124964

தனி இதழ் ரூ.10/- ❀ ஆண்டுச்சந்தா ரூ. 120/-

email : sivasundhari@gmail.com

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மரங்களை வழிபடுவோம்

மரங்கள் மண்ணிற்குக் குடைகளாகவும், மலைகளுக்குப் போர்வையாகவும் இருக்கின்றன. மரங்களைப் போற்றுவதும் வழிபடுவதும் தொன்று தொட்டு இருந்து வருகிறது. இறைவன் மரங்களின் வடிவில் காட்சி கொடுத்ததையும், மரங்களையே தெய்வமாக எண்ணி வழிபடுவதையும் இன்றும் காண்கிறோம்.

சிலப்பதிகாரத்தில் கற்பகமரத்திற்கெனத் தனி ஆலயம் அமைந்திருந்த செய்தி குறிப்பிடப் பட்டுள்ளது. இதனைத் தேவர் தருக் கோட்டம் என அழைத்தனர். சிவனடி யார்கள் சிவபெருமானைக் கற்பக மரமாகவும் அதனைப் படர்ந்திருக்கும் காமவல்லி என்னும் கொடி யைப் பராசக்தியாகவும் கொண்டாடு கின்றனர். சிவபெருமான் எட்டுத் தோள்களுடன் இருப்பதைப் போலவே கற்பகமரம் எட்டுக் கிளைகளைக் கொண்டதாக உள்ளது.

இறைவன் கற்பக மரமாகக் காட்சியளித்த தலம் கற்பகனார் கோயில் என வழங்குகிறது. இது தேவாரத்தில் கடிகுளம் என அழைக்கப் படுவதாகும்.

இறைவன் பலாமர வடிவில் காட்சியளிப்பதை குற்றாலத்தில் காண்கிறோம். இந்தப் பலா மரம் இருக்கும் சந்நிதி குறும்பலாவீசர் சந்நிதி எனப்படுகிறது. திருஞானசம்பந்தர் இந்த குறும்பலாவைப் போற்றித் தனிப் பதிகமே அருளிச் செய்துள்ளார்.

திருப்பெருந்துறையில் இறைவன் குருந்த மரமாகத் தோன்றினான். பிரம்மா அதை சிவமாகப் போற்றி வழிபாடுகள் செய்து வந்தார். அம்மரம் கால வெள்ளத்தால் மறைந்த போது அது இருந்த இடத்தில் கல்லால் மரம்செய்து நிலைப் படுத்தி வணங்கி வருகின்றனர். அவ்விடம் குருந்தமூலம் என அழைக்கப்படுகிறது. மரங்களை வழிபடும் நிலையைப் பல்வேறு தலங்களில் இன்றும் காண்கிறோம்.

இந்த இதழில் ....

வெற்றித்திருமகள்துணையுடன் ஆறாவது ஆண்டில்	...3
கருணை வெள்ளமே காஞ்சி காமாட்சி	...4
உருத்திரன்	...5
வெண்ணெய்ப் பிரான்	...7
திருமுறைகள் செய்த அற்புதங்கள்	...10
ஏகலிங்கம்	...14
மச்சேந்திரர்	...16
அதிரண சண்டேசுவரக் கிருகம்	...23
ஸ்வர்ணகௌரி மண்டல வழிபாடு	...25
முத்துத் தாண்டவர்	...27
மாதவச் சிவஞான முனிவர் திருநட்சத்திர விழா	..29
சமய வாழ்வில் ஆடும் யானையும்	...31

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெற்றித்திருமகள்துணையுடன்

ஆறாவது ஆண்டில் .....

பேரன்புடையீர்!

சிவசுந்தரியின் இதழ்வழிப் பயணம் ஐந்தாண்டு களைக் கடந்து ஆறாவது ஆண்டில் காலடி பதிக்கின்றது. இதற்குத் துணை நிற்கும் மயிலை வளர் கற்பக வல்லியின் திருவடிகளைப்போற்றிவணங்குகின்றோம். இந்த இனிய பணிக்கு ஆசி வழங்கி ஆதரித்துவரும் குருமகான்களுக்கும்,தொடர்ந்து நல்லாதரவை நல்கி வரும் அன்பர்களுக்கும்,பல்வகையாலும் நல்லுதவிபுரிந்து வரும் நண்பர்களுக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்து மகிழ்கின்றோம். இனி வரும் காலங்களிலும் தங்கள் மேலான உதவி களையும் வாழ்த்துகளையும் அளித்து சிவசுந்தரியை ஆதரித்து மேன்மைப்படுத்த வேண்டுகிறோம்.

பொங்கும் மங்கலம் எங்கும் தங்குக!

அன்பன் - பூசை. ச. ஆட்சிலிங்கம்

துதி மஞ்சரி



தேவதேவனாக விளங்கும் சிவபெருமானே! கருணைக் கடலே! உமக்கு வணக்கம்.எல்லா உயிர்களுக்கும் புத்தி,யுக்தி, முத்தி,பலம் கொடுப்பவரே! உமக்கு வணக்கம். எல்லா உலகங்களையும் படைத்து, காத்து, அழித்து அதை ஓயாது நடத்துபவரே! உமக்கு வணக்கம். வாழ்க் கைப் பயணத்தில் திசை தெரியாமல் தடுமாறிப் பயத்தால் கலங்கி நிற்கும் அன்பர்களுக்கு அவர்களின் பயத்தை நீக்கிச் சம்சாரக் கடலைத் தாண்டக் கப்பலைஅளித்துக் கரையேறச் செய்யும் பெருமானே! உனக்கு வணக்கம்.

சூலத்தையும் கபாலத்தையும் அக்னியையும் தாங்கி நிற்கும் விசுவ நாதரே! நீலகண்டப் பெருமானே!, யானைத்தோலைப் போர்த்திருக்கும் பெருமானே! கருணைக் கடலே, என்னைக் காத்து அருள்புரியும். எனது உள்ளத்தில் மகிழ்ச்சி நிலவச் செய்வாயாக! உனது மகிமை பொருந்திய திருவடிகளைப் போற்றிப் பணிகின்றேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கருணை வெள்ளமே காஞ்சி காமாட்சி

ஸ்ரீ என். லக்ஷ்மணன்,
மல்காஜ்கிரி, ஹைதராபாத் 47

காஞ்சி என்ற பெயரைச் சொன்னதுமே அன்பர்களுக்கு, அன்னை காமாட்சிதான் கண்முன் தோன்றுகிறாள். காமாட்சியைப் போற்றும் அநேக துதிகளில் மூக பஞ்ச சதீ தான் மிகப் பிரசித்தமானது.

பக்தர்கள் ஆர்யா சதகத்தின் மூலம் தேவியின் வடிவத்தை தியானம் செய்து, பிறகு தேவியின் பாத சேவையைப் பாதார விந்த சதகத்தில் செய்து, இதனால் தூண்டப் பட்டுத் தேவியை வாயா துதி சதகத்தில் துதி செய்து, அதன் பலனாகப் பெறவேண்டிய தேவியின் கடாட்சத்தை கடாட்ச சதகத்தில் வேண்டி, இறுதியில் அந்தக் காமாட்சிதேவி யின் கருணை ததும்பும் புன்முறுவலான ஆனந்த கடலில் பேரின்பத்தை மந்த ஸ்மித சதகத்தில் அடைகிறான் என்று ஜகத்குரு பரமாச்சாரியாள் கூறியுள்ளார்.

மன்மதனுக்கு விரோதியான பரமசிவத் தின் சக்தியாக உள்ள ஸ்ரீ காமேஸ்வரியாயும், ஸ்ரீகாமகோடி பீடத்தின் மத்தியில் விளங்கு பவளாயும், ஸஹஸ்ரதள கமலத்தில் விளங் கும் பராசக்தியாயும், காமகலா ஸ்வரூபிணி யாயும், சகல காமனைகளின் எல்லையாயும் விளங்குகின்ற ஓ காமாட்சியே! என் ஸர்வா பீஷ்டங்களையும் நிறைவேற்றுகின்ற காம தேனுவாக சம்பவிப்பாயாக என்கிறது ஆர்யா சதகம்.

கங்காதரராகிய பரமசிவனுடைய ராணி யே! காமாட்சியே! அன்னையே ! உன்னு டைய திருவடித் தாமரையானது ஒளி மிகுந்த விளங்குந் தன்மையால் சூரியனாகவும், அமிர்தமயமாய் இருப்பதால் சந்திரனாகவும், சிவந்த வடிவாக அமைந்ததால், செவ் வாயா கவும்அடிவணங்குகின்றவர்களுக்கு ஸௌம் மியமாகவும்,அருளுவதால் (ஸௌம்மிய னான) புதனாகவும், (கிரஹமாகிய) சுக்கிரனா கவும்,(மந்த கதியையுடையதாகையால்) நடையாலே சனியின் தன்மையைப் பெற்ற தாகவும், தன்னைப் பூஜிப்பவர்களுடைய (தமோ குணத்திற்கு) அஞ்ஞானத்திற்கு விரோதியாகி அஞ்ஞானத்தை அழிப்பதால் தமம் என்னும் இராகுவாகவும், கேதுவாக வும் (இவ்வாறு நவக்கிரகங்களுமாய்) சிறந்து விளங்குகின்றது.

தேவியின் திருமேனியை வர்ணிக்கும் சொற்கள், நவக்கிரகங்களின் பெயராக வரும் படி இந்தத் துதியில் அமைக்கப் பட்டிருப் பது சிந்தித்து மகிழ்வதற்குரியதாகும்.

நவக்கிரகங்களும் தேவியின் திருவடி யிலே அந்தர்கதம். ஆகையால் தேவியின் திரு வடியை வணங்குவோர் நவக்கிரகங் களை யும் பூஜை செய்த பலனைப் பெறுவார்கள் என்பது கருத்து.

அன்னையின் அருளுடன் அன்பர்கள் நவக்கிரகங்களின் நல்லருளைப் பெற்று மகிழ்வார்களாக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உருத்திரன்

சிவபெருமானின் அருள் வடிவமாக வெளிப்பட்டவர் உருத்திரர். இவர் பல்வேறு சமயங்களில் பல்வேறு எண்ணிக்கையில் வடிவம் தாங்கி வந்து அன்பர்களுக்கு அருள் புரிகின்றார். அஷ்டருத்திரர், சத்ருத்திரர், கோடிருத்திரர் என்று பல்வேறு நிலைகளில் எண்ணிக்கையில் தோன்றி அருள் புரிவதைப் புராணங்கள் விரிவாகக் கூறுகின்றன.

உருத்திரன் ஓயாது உலகை அழித்து ஆக்கி தொழிற்படுத்திக் கொண்டிருக்கின்றான். கணந்தோறும் அவன் உலக உயிர்களிடத்திலும் அசையும் அசையாப் பொருள் இடத்திலும் மாற்றத்தை நடத்திக் கொண்டே இருக்கின்றான். மாற்றங்களை உண்டு பண்ணுபவனாகவும் அந்த மாற்றத்தால் அனைத்தும் பழையநிலை அழிந்து புதிய நிலையை அடைவதாலுமே கணந்தோறும் உலகில் புதுமைகள் உண்டாகின்றன. ஓயாது கணந்தோறும் அவன் புதுமைகளைப் படைத் துக் கொண்டே இருக்கின்றான்.

உரு என்பதற்கு மேலானது என்பது பொருள். உருத்திரன் என்பதற்கு மேலான வழி யில் செலுத்துபவன் என்பது பொருள். அவன் உயிர்களைத் தீய வழியில் செல்லாதவாறு தடுத்து மேலான வழிகளைச் செலுத்துகிறார்.

உருத்திரனை வழிபடும் வழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. மக்கள் உருத்திரன் என்ற பெயரைச் சூடிக்கொள்கின்றனர். சங்ககாலப் புலவர் ஒருவர் பெயர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்பதாலும், முருகன் சங்கப்புலவர்களின் திறமை யைச் சோதிக்க வந்த போது உருத்திர சன்மன் எனப் பெயர் பெற்றிருந்தான்.

அமைதியும் ஞானமும் அருளும் இடங்கள் உருத்திரசோலைகள் என்று அழைக்கப் பட்டன. உருத்திரகணத்தினர் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தவர்கள். அதனாலும் அவர்கள் வாழ்ந்த இடங்கள் உருத்திர சோலைகள் என்று அழைக்கப்பட்டன என்பர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உருத்திரசோலை, உருத்திர வாலீசுவரங்கள் எனப் பல இடங்கள் இப்போதும் சிறப்பாக உள்ளன.

உருத்திரன் பற்றி வேதம் கூறும் கருத்துக்களின் பொழிவைப் பார்ப்போம்.

ருத்திரன் வடிவம் ஒளிமயமானது. சூறைக்காற்றுடன் சேர்ந்த பயங்கர வடிவினன். அழகிய வடிவுடன் திகழும் இவனே அச்சமூட்டும் வடிவுடன் அனைத்தையும் அழிக்க வல்லவன். இவனது சினத்தைத் தணிவிக்க வேண்டி அன்பர்கள் பலவிதமான தோத்திரங்களைக் கூறி சதாகாலமும் வழிபடுகின்றனர். இவன் மிகப்பெரிய மருத்துவன். இவன் தன்னை விரும்பி வழிபடுபவர்களுக்கு அனைத்தையும் அளிக்கிறான். அனைத்து வகையான நோய்களையும் தீர்ப்பவன். அதனால் மாமருத்துவன் என்று போற்றப்படுகின்றான். மாறாத இளமை மிக்கவனாவான். உயிர்களுக்கு நெடிய ஆயுளை அளிப்பவன்.

உருத்திரனே, உயிர்களை நல்வழிச் செலுத்துபவன். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகவும் சிறந்த புலவராகவும் பல்லவப் பேரரசனாக திகழ்ந்து விளங்கியவரும் ஆன ஐயடிகள் காடவர்கோன் (பரமேசுவரவர்மன் தான் அமைத்த மாமல்லபுரக் கலைக் கோயில்களில், உருத் திரன் மக்களை தீயவழிகளில் இருந்து விலக்கி நல்வழியில் செலுத்துகிறான். அவனை மனதில் நிறுத்தி வணங்காதவர்கள் ஆறுமுறை சபிக்கத் தக்கவர்கள் என்ற பொருள் தரும் வடமொழி வாசகங்களைப் பொறித்து வைத்துள்ளார்.

ஸ்ரீமகா பைரவர் அஷ்டவிதார்ச்சனை

நமது கலைக் கூடத்தின் சார்பில் ஸ்ரீமகா பைரவ மூர்த்திக்கு எதிர்வரும் 09-06-13ஆம்நாள் ஞாயிற்றுக் கிழமை அஷ்ட விதார்ச்சனை செய்வதாக உள்ளது.1008வடைமாலையுடன் நடைபெறும் அஷ்டவிதார்ச் சனையில் பங்கு கொண்டு பைரவர் அருளால் வாழ்வில் இன்பங்களைப் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ அன்புடன் அழைக்கிறோம்.

சிவசுந்தரி, பூசை.ச.ஆட்சிலிங்கம்

சிவபெருமானுக்குக் கொன்றையும், வில்வமும், முருகனுக்குக் கடம்பும், காந்தளும், விநாயகருக்குத் தும்பையும், அருகும், திருமகளுக்கு வில்வமும், தாமரையும், ஐயனாருக்குப் பலாசமும், பாலையும், துர்க்கைக்கு பொன்னலரி, செந்தாமரையும், சந்திரனுக்கு அல்லியும், ஆம்பலும், சூரியனுக்குச் செந்தாமரையும், பொன் தாமரைகளும், பார்வதிக்கு நீலோற்பலமும், பாரிஜாதமும், காளிக்கு செம்பரத்தை, பைரவ மூர்த்திக்குக் கள்ளியும், ஷெண்பகமும், சோமாஸ்கந்த மூர்த்திக்கு செவ்வந்தியும், பிரமதேவனுக்குப் பொற்றாமரையும், பொற்பூக்களும் அக்னிக்கு செங்காந்தாள், செவ்வலரியும், சனிக்கு கருங்குவளையும், வன்னியும், யம தருமனுக்கு நீல மலர்களும், நந்திதேவருக்கு நந்தியாவர்த்தமும், வெண்மலர்களும் பூசிப்பதற்கான சிறந்த மலர்களும் தளிர்களுமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெண்ணெய்ப் பிரான்
(நவனீதேசுவரர்)

பாரததேசத்தின் முதன்மைபெற்ற உணவுப் பொருட்களில் ஒன்றாக இருப்பது வெண்ணெய். பாலைச் சுண்டக்காய்ச் பிரை ஊற்றித் தயிராக்கி, அதைக் கடைந்து வெண்ணெய் எடுப்பர். தயிரைக் கடையும் போது திரண்டு வரும் தூய வெண்ணிறம் கொண்ட வெண்ணெய் சுவையானது. அது பலநாட்கள் வரை கெடாது இருப்பது.

மக்கள் வெண்ணெய் உருண்டைகளைத் தெய்வங்களுக்குப் படைத்து மகிழ்கின் றனர்.

சிவபூஜாதுரந்தரர்கள், சிவலிங்கம் கிடைக்காதபோது வெண்ணெய் உருண்டைகளை ஆசனத்தில் நிலைப்படுத்தி அதையே சிவலிங்கமாகப் பாவித்து சிவபூசை செய்கின்றனர். இந்த லிங்கத்திற்கு நவனீத லிங்கம் என்பது பெயர்.

சிக்கல் என்னும் தலத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானுக்கு நவனீதேசுவரர் என்பது பெயர். நவனீதம் என்பது வெண்ணெயைக் குறிக்கும் வடமொழிச் சொல்லாகும்.

இவ்வூர் தலபுராணத்தில் இங்கு தங்கியிருந்த காமதேனுவின் மடியிலிருந்து வெளியேறிய பால் ஒரு பெரிய மடுவாகத் தங்கியது. அப்பாலில் காற்று மோதுண்டு அலை அடித்தது. அலைகளின் திரட்சியால் வெண்ணெய் திரண்டது. வசிட்ட முனிவர் அப்படித் திரண்ட வெண்ணெயை எடுத்து சிவலிங்கமாக நிலைப்படுத்தி வேதாகம நெறியில் சிறப்புடன் வழிபட்டார். பூஜை முடிந்த பிறகு அந்த வெண்ணெய் லிங்கத்தை எடுக்க முயன்றபோது அது தரையோடு தரையாகச் சிக்கிக்கொண்டது. அது முதல் அத்தலம் சிக்கல் என்றும் வெண்ணெயால் உருவானபிரான் வெண்ணெயப்பர் என்றும் அழைக்கப்படுகின்றார். வெண்ணெயைப் பிரானுக்கு நிவேதனத்துடன் விளாம்பழங்களுடன் நிவேதித்து பிரசாதமாக உண்டால் உடல் பொலிவும் ஞானமும் செல் வமும் உண்டாகும் என்ற நம்புகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிக்கலில் வெண்ணெய்ப் பிரானாக இருப்பதைப்போலவே மற்றோர் தலத்திலும் அவர் வெண்ணெய்ப் பிரானாக இருக்கிறார். அவர் பெயரால் அத்தலம் நல்வெண்ணெய் என்று அழைக்கப்படுகிறது. இத்தலம் திருஞானசம்பந்தரால் பாடப்பெற்றதாகும்.

இத்தலத்து இறைவன் நல்ல வெண்ணெயால் திருமஞ்சனம் கொள்ளுகின்றான். அவன் பால், தயிர், நெய் ஆகியவற்றால் அபிஷேகம் கொள்வது பற்றிய குறிப்புகள் உள்ளன. ஆனால், வெண்ணெய் கொண்டு முழுக்காட்டும் வழக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. என்றாலும், திருஞான சம்பந்தர் இத்தலத்து இறைவன் வெண்ணெய் அபிஷேகம் கொள்வதை நல்வெண்ணெய் விழுது பெய்து ஆடுதீர் நாள்தொறும் என்று கூறுவதன் மூலம் இத்தலத்தில் வெண்ணெய் அபிஷேகமும் வெண்ணெய்க் காப்பும் நடை பெற்றதை அறிய முடிகிறது.

சுந்தரரைச் சிவபெருமான் தடுத்து ஆட்கொண்ட தலத்தின் பெயர் திருவெண்ணெய் நல்லூராகும். இத்தலத்தில் காமதேனு அமைத்துக் கொடுத்த அம்பிகை வெண்ணெயால் அமைந்த கோட்டையின் நடுவே இருந்து தவம் புரிந்ததாகக் கூறப்படுகிறது.

அஷ்டபந்தனமும் எருமை வெண்ணெய்யும்

ஆலயங்களில் குடமுழுக்கு விழாவின் போது தெய்வத் திருவுருவங்களின் பீடத்தில் மருந்து சார்த்துதல் என்னும் நிகழ்ச்சி நடத்தப்படுகின்றது. கருவறையில் உள்ள பீடத்தோடு அதன் மீது எழுந்தருளியுள்ள தெய்வத் திருவுருவச் சிலையை இணைக்கும் விதமாக எட்டுப் பொருட்களைக் கொண்டு இடித்துச் சலித்துச் சேர்க்கப்பட்ட பொருளைக் கொண்டு சார்த்துகின்றனர். இது அஷ்டபந்தன மருந்து என்றும் அழைக்கப்படும். கருஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும் இந்த மருந்து உருண்டைகளை உரலில் எருமைவெண்ணெய்யோடு சேர்த்து இடித்ததும் இளகி, விழுது(பசை) போலாகும். இதை உருட்டி பீடத்தில் வைத்து அழுத்துவதுடன் அதன்மீது செந்தூரத்தைப் பூசுவர். இது மந்திரமயமான இணைப்பை ஏற்படுத்தும் என நம்புகின்றனர். இத்தயாரிப்புக்கு எருமை வெண்ணெய் அடிப்படையாக உள்ளது. இப்போது இடிப்பதற்கு ஆள் கிடைக்கவில்லை என்று கொதிநீரில் அஷ்டபந்தனத்தை இட்டு இளகச் செய்து சார்த்தும் வழக்கம் வந்துள்ளது. மருந்து சூடாகி இளகினால் அதன் தெய்வீகத் தன்மை விலகிவிடும் என்று பலர் கருதுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெண்ணெய் உடல் வெப்பத்தை நீக்கி குளிர்ச்சியை அளித்து மனமகிழ்ச்சியை அளிக்கிறது. உக்கிரமயமான கோபத்தால் கொதித்தெழுந்து போரிட்டு வெற்றியைப் பெற்ற பின்னும் உடல் கனன்று கொண்டிருக்கும் போர்த் தெய்வங்களை சாந்தப் படுத்தஅவர்கள் திருமேனியில் வெண்ணெய் அணிவிக்கின்றனர். காளிதேவி, வீரபத்திரர், வீரஆஞ்சநேயர் முதலிய தெய்வங்களுக்கு வெண்ணெய்க் காப்பு அணிவிக்கின்றனர்.

கண்ணபிரான் வெண்ணெய்யை விரும்பி உண்கிறார். வெண்ணை உருண்டையை வைத்துக்கொண்டு நடனமாடும் கோலத்தில் உள்ள கண்ணனை வெண்ணெய்க் கண்ணன் என்றும் நவனீதகிருஷ்ணன் என்றும் அழைக்கின்றனர்.

இத்தெய்வங்களுக்கு சந்தனக்காப்பு அணிவிப்பது போல் வெண்ணெய்க் காப்பும் அணிவிக்கப்படுகிறது.



மாமல்லபுரத்து வெண்ணெய்க் கல்

மாமல்லபுரத்தில் திரிமூர்த்தி கோயில் என்ற குடைவுரைக் கோயில் உள்ளது. இது முருகன், சிவன், திருமால் ஆகிய மூவருக்கும் கடைந்தெடுக்கப்பட்ட கோயிலாகும்.

இதன் தென்புறம் பெரிய துர்க்கையின் சிலையும், மகர தோரணங்களுக்கிடையே அமைக்கப்பட்டுள்ளது. போரில் விருப்பமுற்றவர்களும், ரணரசிகன், சத்ருமல்லன் முதலிய பெயர்களைப் பெற்றவர்களுமான பல்லவமன்னர்கள் இக்கோயிலை அமைத்துள்ளனர். இங்கு காணப்படும் நான்கு தெய்வங்களுமே போர்த் தெய்வங்களாக இருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இக்கோயிலுக்கு முன்பாகக் கல்லில் குடைந்து வட்டமாகச் செய்யப்பட்ட பெரிய தொட்டி உள்ளது. இதை வெண்ணெய்த் தொட்டி என்கின்றனர். போர்த் தெய்வங்களுக்கு அவர்களை மகிழ்விக்க வெண்ணெய் சார்த்தும் வழக்கம் இருப்பதால், இந்த வெண்ணெய்த் தொட்டியை அமைத்துள்ளனர் என்கின்றனர். பக்தர்கள் வேண்டுதலாக வெண்ணெயை எடுத்து வந்து இதில் இட்டிருக்க வேண்டும் என்று கருதுகின்றனர். அப்படி இட்ட வெண் ணெயில் ஒரு துளி அருகில் உள்ள சரிவில் வீழ்ந்ததாகவும், அதில் பெரிய பாறை வந்து ஒட்டிச் சிக்கிக் கொண்டதாகவும் கூறப்படுகிறது. மிகுந்த சரிவான பாறையில் துளியோண்டு இடத்தில் ஒட்டிக் கொண்டுள்ள இந்தப் பெரும்பாறை காலங்காலமாக அசையாதிருப்பது ஆச்சர்யமாக இருக்கிறது. மக்கள் இதனை வெண்ணெய்ப் பாறை என்று அழைக்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமுறைகள் செய்த அற்புதங்கள்



தமிழ்வேதம் என்று போற்றப் படுபவை பன்னிரு திருமுறைகள். மக்கள் உய்யும் பொருட்டு இறைவன் அடியவர்கள் வாக்கிலிருந்து தனது உரையாகத் தானே வெளியிட்டதாகக் கருதப்படுபவை இந்நூல்க ளாகும். திருஞான சம்பந்தர், அப்பர் சுவாமி கள், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகிய மூவரும் பாடியதும், மண்மேல் பல அற்புதங்களை விளைவித்ததும் ஆகிய பாடல்கள், தேவாரம் என அழைக்கப்படுவதுடன், முதல் ஏழு திருமுறைகளாகத் தொகுக்கப் பட்டுள்ளன.

எட்டாம் திருமுறையாகத் திகழ்வது மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகம். தேவாரம், திருவாசகம் நிகழ்த்திய அற்புதங்களைப் பட்டியலிட்டு, அதன் பெருமைகளை விளக்கிப் பல நூல்கள் எழுந்துள்ளன. அவற்றுள் மிகச்சிறந்த பாடல்களாகப் பின்வரும் நான்கு பாடல்கள் போற்றப்படுகின்றன.ஒவ்வொன்றும் முறையே திருஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணி வாச கரின் பாடல்களை விளைவித்த அற்பு தச் செயல்களைப் பட்டியலிடுகின்றன. முதலில் பாடல் களையும் தொடர்ந்து அதன் கருத்துரை சுருக்கத்தையும் காணலாம். அதற்கும் முன்பாக பன்னிரு திருமுறைகளின் சிறப்பைப் பட்டிய லிடும் துதி ஒன்றையும் படித்து இன்புறலாம். இவ்வகையில் ஐந்து பாடல்கள் இங்கே இடம் பெற்றுள்ளன.

திருமுறைச் சிறப்பு

திருமுறையே சைவநெறிக் கருவூலம்
தென்தமிழின் தேன்பா காகும்
திருமுறையே கயிலையின்கண்
சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம்வருந்த
எழுதியஅருள் தெய்வநூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய்
மலர்ந்தருளும் சிறப்பிற் றாமால்.

திருமுறைகளின் சிறப்பை விளக்கும் மேலே குறித்த பாடலின் கருத்துக்களை முதலில் காணலாம்.

திருமுறைகளே சைவசமயத்தின் மேன் மை யான வழிமுறைகளை விளக்கி நிற்கும் கருத்துக் களஞ்சியமாகும். ஞானப் பொக்கிஷ மாகும். வலிமை மிக்க தமிழின் இனிமை யைப் பறைசாற்றுபவை. சிவபெருமான் கயிலை மலையில் செவியாறக் கேட்டு மகிழ்ந்த வேதமொழிகளைக் கொண்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமான் வேதங்களைக் கூற, மற்றவர்கள் கேட்டுக் கொள்வதே வழக்கம். இங்கு சேரமான் அருளிய திருக்கயிலாய ஞான உலாவை இறைவன் தன் செவியாரக் கேட்டு மகிழ்ந்தான்.

வடமொழி வேதம் எழுதாமறை வாய்மொழியாகவே வாழையடி வாழையென வருவது. தமிழ் வேதமான திருவாசகமோ தில்லை நடராசனால் கேட்டு மகிழ்ந்ததுடன், கைப்பட எழுதி வைக்கப்பட்ட பெருமை உடையது. அத்துடன் மதுராபுரி வாழ் மன்னனான சொக்கலிங்கப் பெருமான் கைப்பட எழுதிய சீட்டுக் கவியைத் தன்னகத்தே கொண்டது. ஆக இறைவனால் கைப்பட எழுதப்பட்டதும், செவியாரக் கேட்டு மகிழ்வடைந்ததும் அவற்றைக் கேட்கும் விருப்பால் அன்பர்களுக்குப் பொன்னும் பொருளும் அளித்ததும் திருமுறைகளின் சிறப்பாகும்.

இனி அடியவர்கள் அற்புதச் சிறப்பை விளக்கும் பாடல்களைக் காண்போம். முதற்பாடல் திருஞானசம்பந்தப் பெருமான் செய்த அற்புதங்களைக் கூறு கிறது.

திருமுறை மகிமை

புனலில் ஏடெதிர் செல்லெனச் செல்லுமே;
புத்த னார்தலை தத்தெனத் தத்துமே;
கனலில் ஏடிடப் பச்சென்(று) இருக்குமே;
கதவு மாமறைக் காட்டில் அடைக்குமே;
பனையில் ஆண்பனை பெண்பனை ஆக்குமே;
பழைய என்புபொற் பாவைய தாக்குமே ;
சிவன ராவிடம் தீரெனத் தீருமே ;
செய்ய சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே .

தலைகொள் நஞ்சமு தாக விளையுமே;
தழல்கொள் நீறு தடாகம தாகுமே;
கொலைசெய் ஆனைகுனிந்து பணியுமே ;
கோள ராவின் கொடவிடம் தீருமே;
கலைகொள் வேத வனப்பதி தன்னிலே;
கதவு தானும் கடுகத் திறக்குமே;
அலைகொள் வாரியிற் கல்லும் மிதக்குமே;
அப்பர் போற்றும் அருந்தமிழ்ப் பாடலே.

வெங் கராவுண்ட பிள்ளையை நல்குமே;
வெள்ளை யானையின் மீதேறிச் செல்லுமே;
மங்கை பாகனைத் தூது நடத்துமே;
மருவி யாறு வழிவிட்டு நிற்குமே;
செங்க லாது தங்கம தாக்குமே;
திகழும் ஆற்றிட்டுச் செம்பொன் எடுக்குமே;
துங்க வான்பரி சேரற்கு நல்குமே;
துய்ய நாவலூர்ச் சுந்தரர் பாடலே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருகும் வைகை தனையடைப் பிக்குமே;
பிரம்ப டிக்கும் பிரான்மேனி கன்றுமே;
நரியெ லாம்பரி யாக நடத்துமே;
நாடி முகை தனைப்பேசு விக்குமே;
பரிவிற் பிட்டுக்கு மண்சுமப் பிக்குமே;
பரமன் ஏடெழு தக் கோவை பாடுமே;
வருகும் புத்தரை வாதினில் வெல்லுமே;
வாத வூரர் வழங்கிய பாடலே.

இனி அடியவர்கள் அற்புதச் சிறப்பை விளக்கும் மேலே குறித்த பாடல்களின் பொருளைக் காண்போம்.முதற் பாடல் திருஞானசம்பந்தப் பெருமான் செய்த அற்புதங்களைக் கூறுகிறது.

மதுரையில் அவருடன் சமணர்கள் வாதம் செய்தபோது அனல் வாதம், புனல் வாதம் என்பனவற்றை மேற்கொண்டனர். சம்பந்தர் திருமுறை எழுதி வைகை ஆற்றில் இட்ட ஏடு தண்ணீரை எதிர்த்துச் சென்றது. அனல் வாதத்தின் போது அவர் போகமார்த்த பூண்முலையாள் என்ற பாடலை எழுதி இட்டபோது அது எரிந்து போகாமல் இருந்ததுடன் ஏடும்பச்சையானது.

சாரி புத்தன் என்பான் சம்பந்தருக்குத் தொல்லை தந்தபோது அவருடைய உதவி யாளராக இருந்த சம்பந்த சரணாலயர் என்பவர் புத்தநந்தியின் தலையில் இடிவிழ என்றதும் கடும் ஓசையுடன் இடிவிழுந்து அவன் மாண்டான்.

திருநாவுக்கரசர் திருமறைக்காட்டில் பாடித் திறந்த கதவைச் சம்பந்தர் பாடி மூடும் படிச் செய்தார். திருஒத்தூரில் ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கி அவற்றை பழம் தரும்படிச் செய்ததும்,மயிலாப்பூரில் மாண்டு எலும்பாகிக் குடத்தில் இடப்பட்டிருந்த பூம்பாவையின் எலும்புகளை முன் போலவே பெண்ணாக்கி எழுப்பியதும், திருமருகலில் பாம்பு கடித்து மாண்டு செட்டி மகனை உயிர்ப்பித்து, அவனது மாமன் மகளுக்குத் திருமணம் செய்து வைத்ததும் திருஞான சம்பந்தர் அருளிய பாடல்கள் செய்த அற்புதங்களாகும்.

இரண்டாவதான பாடல், திருநாவுக் கரசு நாயனார் அருளிய பதிகங்கள் செய்த அற்புதங்களை விவரிக்கிறது.

தம் சமயத்தில் முதன்மையாக இருந்த திருநாவுக்கரசர் சைவசமயத்திற்குத் திரும்பி விட்டார் என்பதை அறிந்த சமண சமயத்தினர், அவரை அழிப்பதற்காக நஞ்சு கலந்த உணவை அளித்து உண்ணச் செய்தபோது, அதை அமுதம் ஆக்குவித்தது, சுண்ணாம்புக் காளவாயில் இட்டுச் சுட்டபோது அந்தக் கொடிய தணலைக் குளிர்ந்த நீர்ப் பொய்கை தரும் குளிர்ச்சியான இன்பத்தைப்போல் ஆக்கியது. அவர்கள் அவரைக் கொல்ல மதம் பிடித்த யானையை ஏவிய போது ஆர்ப்பரிப்புடன் வந்த அந்த யானையை மண்டியிட்டுப் பணியும்படிச் செய்தது,

திங்களூரில் பாம்பு கடித்து மாண்ட அப்பூதி அடிகளின் புதல்வனை உயிர்பெறச் செய்தது. திருமறைக் காட்டில் வேதங்கள் பூசித்து மூடி விட்டுச் சென்ற கதவுகளைத் திறக்கச் செய்தது. சமணர்கள் கல்லில் கட்டிக் கடலில் விட்ட போது அக்கல்லையே தெப்பமாக மிதக்கச் செய்தது எனப் பல அற்புதங்களை நிகழ்த்தியது அப்பரின் அருட்பாடல்களாகும்.

மூன்றாவதான பாடல் சுந்தரரின் சொற்றமிழ் செய்த அருஞ்செயல்களைப் போற்றிப் பட்டியல் இடுகிறது. அவிநாசிப் பதியில்

கொடிய சிவந்த கண்களைக் கொண்ட முதலை என்றோ உண்ட பாலனை முன்வந்து உமிழச் செய்தது. அவரை வெள்ளை யானை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மீது ஏற்றி கயிலைக்கு அனுப்பியது,அவருக் காகத் திருவாரூர் வீதிகளின் இறைவனை தூது போக வைத்தது, திருவையாற்றில் காவிரியை வழிவிடச் செய்தது, திருப்பனையூரில் செங்கல்லைத் தங்கக் கட்டிகளாகச் செய்தது. மணிமுத்தாற்றில் இட்ட பொற்காசுகளைத் திருவாரூர் குளத்தில் கிடைக்கச் செய்தது, சேரமன்னர்க்குக் குதிரையை அளித்தது, போன்றவை நாவலூர் ஆளியான சுந்தரரின் இன்தமிழ் செய்த அற்புதங்களாகும்.

நான்காவது பாடலில், மணிவாசகப் பெருமான் பொருட்டு செய்த அற்புதங்களை இறைவன் நடத்தியது குறிக்கப்பட்டுள்ளது. மதுரையில் வைகையாற்றைப் பெருகி வரச் செய்ததும், அதை இறைவனைக் கொண்டு அடைக்கச் செய்ததும், இறைவன் பாண்டியனிடம் பிரம்படி பட வைத்ததும், நரிகளைக் குதிரைகளாக நடத்தியது, தில்லையில் ஊமைப் பெண்ணைப் பேச வைத்தது, பிட்டுக்காக மண் சுமக்க வைத்தது ஆகியவை மணிவாசகர் தமிழால் விளைந்ததாகும். இவற்றை அவன் ஏன் செய்தான் என்றால் தேனினும் இனிய தெய்வத்தமிழ் திருவாசகத் தைக் கேட்பதற்கேயாகும்.

விஷாபகரணம்



கதை சொல்லும் அழகிய சுதைச் சிற்பங்களைத் தாங்கி நிற்கும் கோபுரம் திருமயிலைக் கபாலீசுவரர் ஆலய கோபுரமாகும். இதன் வடமுகத்தில் அமைந்துள்ள விஷாபகரணர் சிற்பத் தை இங்கு காண்கிறோம். தேவர்கள் அமுதம் வேண்டி அசுரர்களிடம் கூடி பாற்கடலைக் கடையும் காட்சியை அடுத்து இது அமைக்கப்பட்டுள்ளது. இதில் உயர்ந்த ஆசனத்தில் பெருமான் ஒருக்களித்து சாய்ந்து அமர்ந்திருக்க, திருவடியில் உமாதேவி அமர்ந்திருக்கிறாள். விஷத்தைக் திரட்டி வந்து தரும் சுந்தரர், இந்திரன், பிரமன், திருமால், நந்திதேவர், தும்புரு, நாரதர் ஆகியோரையும் இதில் காண்கிறோம். இது அரிய காட்சி என்பதில் ஐயம் இல்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏகலிங்கம்

சிவபெருமான் ஒருவனே காலங்களைக் கடந்த காலாதீதன், அழிவற்றவன். இந்த உலகம் அவனிடத்தில்இருந்து தோன்றி நெடுங்காலம் வளர்ந்து அவனிடத்திலேயே ஒடுங்குகிறது.அவன் ஒருவன் மட்டுமே நிலையாக இருக்கிறான்.

உலகப் படைப்பிற்கு முன்பாக அவன் ஒருவன் மட்டுமே இருந்தான். உலகம் நடைபெறும்போதும், அவற்றை வழிநடத்துவோனாக அவன் மட்டுமே இருக்கிறான்.

அவனால் படைக்கப்பட்ட பிரம்மா, விஷ்ணு முதலான எண்ணற்ற தேவர்கள்

உலகைப்படைத்தும், காத்தும் அழித்தும் ஓயாது தொழில்புரிந்த போதிலும், அவர்கள் எல்லோரும் சிவபெருமானால் இயக்கப்பட் இறுதியில் அவனிடத்தில் ஒடுங்குபவர்களே. அவர்கள் சிவபெருமானின் ஆணைப்படியே தத்தம் தொழிலை நடத்து கின்றனர். தேவர்களுக் கெல்லாம் தேவனாக இருப்பதால் சிவபெருமான் **தேவதேவன்** என்று அழைக்கப்படுகிறான்.

அவனை ஏகன் என்றும், ஒருவன் என்றும் சமய நூல்கள் குறிக்கின்றன. வடமொழியில் அவனை ஏகன் என்றும், ஏகநாதன் என்றும் அழைக்கின்றனர். ஏகநாயகன், இமையவர் நாயகன், புண்ணிய மூர்த்தியே என்பர்.

திருவாசகம் ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க என்று புகழ்கிறது. தனியொருவனாக இருக்கும் அவனே எல்லாவுயிர்களிலும் நிறைந்து நின்று அவற்றை இயக்குகிறான். அதையொட்டியே முதலில் ஏகன் என்று துதித்துத் தொடர்ந்து அனேகன் என்றும் போற்றுகின்றார்.

திருமுறைகளில் அவன் பல இடங்களில் ஒருவன் என்ற தொடரால் குறிக்கப்படுகிறான். அவனைப் போலவே அவனது வாகனமான பெருங்காளையும் ஒன்று என்ற சொல்லாலேயே குறிக்கப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எக்காலத்தும் அழிவின்றி நிற்கும் அவன் தனக்கென வண்ணம் வடிவம், குணம், இன்பதுன்பம் அற்றவன் என்றாலும், வானவரும், தானவரும், மண்ணவரும் அவனுக்குத் தத்தம் விருப்பப்படி பல்லாயிரம் பெயர்களைச் சூட்டி வழிபடுகின்றனர்.

தேவர்கள் எண்ணரிய திருநாமங்களைக் கூறி அவனைப் போற்றி வழிபடுவதை,

"பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெருமான்" என்று குறித்துள்ளனர்.

தனக்கென வடிவம் ஏதும் அற்றவனாக இருந்த போதிலும், அருவினுக்கு அருவாயும் தோன்றும் உருவினுக்கு உருவாயும், ஒப்பிலதாய் முளைத்தெழுந்த சிவலிங்கமாக அவன் காட்சிதருகிறான். அந்த லிங்கத்தை ஏகன் என்றும், ஏகலிங்கம் என்றும் போற்றுகின்றோம்.

காஞ்சியில் மாமரத்தின் கீழ் நிற்கும் ஏகலிங்கனைப் புராணங்கள் ஏகாம்பரன் என்று போற்றுகின்றன. அவனது ஆலயம் ஏகம்பம் என்று அழைக்கப்படுகிறது.

வடநாட்டில் ஏகலிங்கம் என்ற பெயரில் பல சிவாலயங்கள் காணப்படுகின்றன. ஏகலிங்கத்தை ஏகநாதர் எனவும் அழைப்பர். ஏகநாதனை இமையவர் தொழும் ஆதிநாதனை ஒருமுக லிங்கமாக அமைத்து வழிபடும் வழக்கமும் உள்ளது. இதனை ஏகமுக லிங்கம் என அழைப்பர்.

ஏகலிங்க வழிபாடு, யாவும் சிவனே, எங்கும் அவன் பரவி நிறைந்துள்ளான். அழிவற்ற அவன் ஒருவனே உலகிற்கு மூல காரணன், ஆதிகாரணமாக இருப்பதால் காரணீசன் என்றும் அழைக்கப்படுகிறான்.

ஏக நாயகர்

திருவிடைமருதூர் ஆலயத்தில் வீற்றிருக்கும் லிங்கத்திற்கு மகாலிங்கம் என்பது பெயர். வீரத்தைக் குறிக்கும் வீரட்டகாசம். மரத்தடியில் இருப்பதைக் குறிப்பதான திருமறைக்காடல், பாடலீசர், மாவடிநாதர் போன்ற பெயர்கள் அமையாமல் பொதுப்பெயரான மகாலிங்கம் என்றும் பெயர் வழங்குகிறது. இதுபெருமான் அனைத்தையும் கடந்து நிற்கும் தன்மையைக் குறிக்கிறது. அதைப் போலவே இங்குள்ள சோமாஸ்கந்த மூர்த்திக்கு ஏகநாயகர் என்னும் பெயர் வழங்குகிறது. இவர் ஒருவரே தலைவர், யாவும் இவராலேயே செயல் படுத்தப்படுகின்றன என்பது இதன்பொருள்.

சிதம்பரத்தில் சபாநாயகர் ஆலயத்துள், சிற்சபையில் உள்ள ரகசியத்திற்கு முன்பாக ஏகமுக லிங்கம் உள்ளது. அம்பரம் என்பது ஆகாசத்தைக் குறிக்கிறது. இந்த ஏக லிங்கத்திற்கு ஏகாம்பரன் என்பது பெயராகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சென்ற இதழின் தொடர்ச்சி ...

மச்சேந்திரர்

ஒரு சமயம் கடலின் நடுவில் இருந்த பெரிய பாறையின் மீது வீற்றிருந்தவாறு சிவபெருமான் உமாதேவியாருக்கு ஞானமொழிகளை அருளிச் செய்தார். அவர்கள் வீற்றிருந்த பாறையின்கீழ் இருந்த நீரில் வசித்து வந்த மீனின் வயிற்றில் இருந்த கருவில் இருந்த உயிர் அதைச் செவியாரக் கேட்டு மகிழ்ந்தது. சிவபெருமான் அதற்கு மானுட வடிவம் கொடுத்து மச்சேந்திரர் என்று பெயர் சூட்டினார். மச்சேந்திரர் மாபெரும் சித்துக்கள் கைவரப்பெற்று அவர் நாடெங்கும் திரிந்து மக்களுக்குப் பலவிதமான நன்மைகளைச் செய்துவந்தார்.

ஒரு சமயம் புத்திரப் பேறு இல்லாது வருந்திய பெண்மணிக்கு விபூதி அளித்து உமக்கு மகன் உண்டாவான் என்றார். அப்பெண்ணோ அந்த விபூதியை அடுப்பில் போட்டு விட்டார். மறுநாள் அடுப்புச் சாம்பலைக் குப்பையிலும் கொட்டிவிட்டார். ஒன்பது ஆண்டுகள் கழித்து அவ்வூருக்கு வந்த மச்சேந்திரர், அப்பெண்மணியின் வீட்டுக்குச் சென்று "உமது மகன் எங்கே?" என்றார். அவள் அவர் தந்த விபூதியை அடுப்பு நெருப்பில் போட்டுவிட்டதைக் கூறினார்.

மச்சேந்திரர் "அடுப்புச் சாம்பலைக் கொட்டிய இடத்தைக் காட்டுக" என்றார். அவள் காட்டிய குப்பை மேட்டில் இருந்து "மகனே வருக" என்றார். அக்குப்பையில் இருந்து ஒன்பது ஆண்டு பாலகனாக ஒரு சிறுவன் வெளிப்பட்டார். அவனுக்கு கோரக்கர் என்று பெயர் சூட்டினார் இனி....

குப்பையில் இருந்து வெளிப்பட்ட கோரக்கர் மச்சேந்திரரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். அவர் கோரக்கரைத் தழுவிக் கொண்டார். "அன்பனே! உன் தாயை வணங்குக" என்றார். "அம்மையே இதோ உன் மகன். ஒன்பதாண்டு நிரம்பியவன் ஏற்றுக் கொள்க" என்றார்.

ஆச்சார்யரின் கட்டளைப்படி தாயை வணங்கிய கோரக்கர், அவரை வலம் வந்தபின் மீண்டும் மச்சேந்திரரை வணங்கி அவரது வலப்புறம் நின்றார்.

மச்சேந்திரர் ஏதும் பேசாமல் தன் வழி நடந்தார். கோரக்கரும் அவரைத் தொடர்ந்தார். அவரது தாய், "மகனே! மகனே!" என்று அழைத்தவாறு தொடர்ந்தோடி வந்தாள்.

கோரக்கர் தாயிடம், "அன்னையே! எனக்குத் தாயும் தந்தையும் எனது குருநாதரே. என்னைத் தடுக்காதீர். எமது வழியில் செல்ல விடுங்கள்" என்றார். அம்மையார் பலவாறு கேட்டும், கோரக்கர் "குருவோடு செல்வதே தனக்கு இன்பம்" என்றார். அவரது உறுதியைக் கண்ட அம்மையார் அவருக்கு விடைகொடுத்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்னையை வணங்கி விடைபெற்றுக் கொண்ட கோரக்கர் குருவைத் தொடர்ந்தார். குருவும் சீடனுமான மச்சேந்திரரும், கோரக்கரும் பயணத்தைத் தொடர்ந்தனர். இருவரும் பல தலங்களுக்குச் சென்றனர். மச்சேந்திரர் நேரம் கிடைத்த போதெல்லாம் ஒப்பற்ற ஞான நூல்களைப் போதித்ததுடன், தனது ஞான அனுபவங்களைக் கோரக்கருக்கு ஊட்டினார்.

ஆசிரியரே கடவுள் என்று உறுதியாக நம்பியிருந்தபடியால், கோரக்கர் சகல ஞானங்களையும் எளிதில் பெற்றுக் கொண்டார். ஆசிரியரின் நல்வாழ்வுக்காகத் தம் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தையும் தருவதற்குத் தயாராக இருந்தார். கோரக்கர் முதன்மைச் சீடராக இருந்தார். நாளுக்குநாள் சீடர்கள் சேர்ந்து ஞான அனுபவத்தைப் பெற்று மகிழ்ந்திருந்தனர்.

ஞான நூல்களைப் பயிற்றுவதும், ஞான அனுபவங்களைப் பெறுவதும் வாழ்க்கை எனக் கொண்டவர்கள் தேவைக்கு உணவு சமைப்பதில்லை. வேண்டிய போது பிச்சை ஏற்றுத் தனது பசியைப் போக்கிக் கொள்வதே வழக்கம். அம்முறையிலேயே மச்சேந்திரரும் சீடர்களும் வாழ்வை நடத்தி வந்தனர். ஊருக்கு வெளியே நதியோரம் வனங்களில் தங்கி ஞானப்பயிற்சிகளை மேற்கொள்வதும், தேவைப்படும் போது ஊருக்குள் சென்று பிச்சை ஏற்று உண்பதுமாக நாட்களைக் கழித்து வந்தனர். எப்போதும் கோரக்கர் தனக்காகவும் குருவுக்காகவும் பிச்சை ஏற்று வருவது வழக்கம்.

ஒரு சமயம், கோரக்கர் வழக்கம் போல் அருகிலிருந்த ஊரில் பிச்சை ஏற்கச் சென்றார். அவர் சென்ற வீடு ஓர் அந்தணர் வீடு. அன்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



அவர் வீட்டில் திவசம் நடந்திருந்தது. அந்த வீட்டு அந்தணப் பெண் பிச்சை இடும் போது ஒரு வடையையும் சேர்த்து இட்டார். அதைப் பெற்றுக் கொண்டு வந்த கோரக்கர், தன் குருவின் முன் வைத்து வணங்கினார். அவர் உண்ட மிச்சத்தை உண்பதே கோரக்கர் வழக்கம். மச்சேந்திரர் உணவை உண்டு மகிழ்ந்தார்.

"அன்பனே! இந்த வடை மிகவும் சுவையாக இருக்கிறது. நாளையும் இது போல் ஒன்று கிடைத்தால்நலமாக இருக்கும்" என்றார்.

கோரக்கர் மறுநாள், முன்தினம் சென்ற அதே வீட்டுக்குச் சென்றார். "அம்மா, தாங்கள் நேற்று அளித்த வடையை எனது குருநாதர் விரும்பி உண்டார். இன்றும் அதுபோல் ஒன்றை விரும்புகிறார். அதனால் இன்றும் ஒரு வடையை எமக்குத் தருக," என்றார்.

அதைக் கேட்ட அப்பெண்மணி," நேற்று எம் வீட்டில் திதி அதனால் வடை சுட்டோம். தினமும் வடை சுடுவாருண்டோ? துறவிகளுக்கு நாக்குச்சுவை வேண்டுவதா? அப்படியே உனது குரு விரும்பியிருந்தாலும், அதைக் கேட்பதற்கு உமக்கு வெட்கமாக இல்லையா?"என்று கூறிச் சிரித்தாள்.

அதைக் கேட்டு கோரக்கர் வருந்தவில்லை. உலகமக்கள் ஞானிகளின் நிலையை அறிவதில்லை என்பதை அவர் அறிந்தவர் அல்லவா? அதனால் முன்னிலும் பணிவாக,"அம்மையே குருவின் விருப் பத்தை நிறைவேற்றுவது சீடனின் கடமை. அதில் தான் அவனுக்குப் பெருமை இருக் கிறது. நீங்கள் மறுக்காமல் வடைகளைச் சுட்டுத் தர வேண்டும். அதற்கு விலையாக நீங்கள் என்ன கேட்டாலும் அதைத் தருவேன்" என்றார்.

அதற்கு அப்பெண்மணி, "உமது கண்ணைத் தருவாயோ" என்றாள். அம்மையே "உனது விருப்பம் அதுவானால் அது எனக்கு எளிதே", என்று கூறியவாறு தம் மடியில் இருந்த கூரிய கத்தியை எடுத்து வலக்கண்ணைப் பெயர்த்து அவளிடம் கொடுத்தார்.

அவரது செயலைக் கண்ட பெண்மணி அஞ்சி நடுங்கிவிட்டாள். அவரது குரு பக்தியை எண்ணி வியந்தாள். சற்றுப் பொறுக்கும்படி கூறிவிட்டு,உடனேஉட்சென்று விரைந்து ஒரு கூடை நிறைய வடைகளைச் சுட்டுக் கொண்டு வந்து அவரிடம் தந்தாள். அந்த வடைகளைக் கண்டு கோரக்கர் அளவில்லாத மகிழ்ச்சி அடைந்தார்.

அதை எடுத்துக் கொண்டு விரைந்து வந்து குருவின் முன் வைத்து வணங்கினார்.

மச்சேந்திரர் அவற்றை உண்டு மகிழ்ந்தார். அதுவரை கோரக்கரின் முகத்தை அவர் கவனிக்கவில்லை. நிமிர்ந்து பார்த்த போது, அவர் முகத்தில் வலக்கண் இல்லாமல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இருப்பதைக் கண்டு ஏன் என்று கேட்டுக் காரணத்தை வினவினார்.

கோரக்கர் நடந்ததை ஒன்றுவிடாமல் கூறினார். குருவின் விருப்பத்தை நிறை வேற்றக் கண்ணை அளித்த அவரது குரு பக்தியை எண்ணி வியந்தார்.

மச்சேந்திரர், இறைவன் திருவருளைத் துதித்து அவரது கண்ணிருந்த குழியைத் தடவினார். முன்னைவிட அழகிய கண்கள் அங்கு வந்து விட்டன. இறைவன் அருளை யும் மச்சேந்திரரின் பெரும் சக்தியையும் எல்லோரும் கண்டு வியப்படைந்தனர். கோரக்கரை வாழ்த்தினர்.

சீடர்களில் சிலர், "இவர் என்ன துறவி; இவர் செய்வதை எல்லாம் நாங்களும் செய்வோம் " என்றனர். மச்சேந்திரர் அதை அறிந்திருந்த போதிலும் வெளிக் காட்ட வில்லை.

ஒருநாள் அவர்கள் கொல்லர்கள் வாழும் தெரு வழியாகச் சென்று கொண்டிருந்தனர். அப்போது கொல்லர்கள் உலோகங்களைக் கொதிக்க வைத்துக் கொண்டிருந்தனர். செந்தீயில் உலோகங்கள் தண்ணீரைப் போல் கொதித்துக் கொண்டிருந்தன.

அவர்களிடம் சென்று மச்சேந்திரர் நீர் வேண்டுமென்றார். அவர்களில் சிலர் பரிகாசமாக, "உலைக்களத்தில் கொதித்துக் கொண்டிருக்கும் உலோகக் குழம்புதான் இருக்கிறது. வேண்டுமானால் அதைக் தரட்டுமா?" என்றனர். மச்சேந்திரர் "அப்படியே செய்யுங்கள்" என்றார்.

குறும்புக்கார கொல்லன் ஒருவன் நீண்ட கரண்டியால் கொதிக்கும் உலோ கத்தை மொண்டு வந்தான். மச்சேந்திரர் அதை வாங்கிப் பருகினார். அதைக் கண்ட கொல்லர்கள் பயந்து நடுங்கிவிட்டனர். மச்சேந்திரர் கோரக்கரைப் பார்த்தார்.

குருவின் மனதைப் புரிந்து கொண்ட அவர் நேரே சென்று கொதிக்கும் குழம்பை (கருவை) தமது இரண்டு கைகளாலும் தண்ணீரை அள்ளிப் பருகுவதைப் போல் அள்ளிக் குடித்தார்.

சீடர்கள் பயந்து நடுங்கினர். மச்சேந் திரர், "கோரக்கர் செய்வதை எல்லாம் நீங்கள் செய்ய முடியுமா" என்றார். சீடர்கள் தலை குனிந்தனர். கோரக்கர் குருவின் பாதங்க ளில் வீழ்ந்து வணங்கினார்.

இனியும் தொடரும்

சிவஞானிக்கு அளிக்கும் அமுது

சிவஞானிகளுக்குச் செய்யும் தானம், அதை அளிப்பவருக்கு மிகுந்த புண்ணியத்தைத் தருவதாகும். அது எள் அளவு சிறியதாக இருப்பினும், அதனால் உண்டாகும் பயன் மிகப் பெரியதாகும். அது பூமியை விட, அதைச் சுற்றியிருக்கும் சக்ரவாளக் கிரிகளை விடப் பெரியதாகும். சிவஞானியருக்கு அன்னம் அளிக்கும் பக்தர்கள், சரியை, கிரியை, யோகம் முதலிய மார்க்கங் களில் நிற்காமல், நேரே ஞான மாக்கத்தைக் கடந்து-சிவனடியை அடைவர். எல்லையில்லா ஆனந்தத்தில் திளைத்திருப்பர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நட்சத்திர தேவதைகள் - 1

வான மண்டலத்தில் கோடானு கோடி நட்சத்திரங்கள் உள்ளன. ஒவ்வொரு நட்சத்திரமும் தன்னிடம் பல கோள்களையும் துணை நட்சத்திரங்களையும் கொண்டுள்ளன. பாரததேச மக்களுக்கு நட்சத்திர மண்டலங்கள் பற்றிய அறிவும் அதன் இயக்கம், தூரம் முதலிய செய்திகளும் தெளிவாகத் தெரிந்திருந்தன. எண்ணற்ற நட்சத்திரங்கள் இருந்தாலும் அவற்றில் மனிதகுலத்தின் வாழ்வு முறைக்கும், நாம் வாழும் இவ்வுலகத்தின் இயக்கத்திற்கும் இடையே உள்ள தொடர்புடைய இருபத்தேழு நட்சத்திரங்களைத் தேர்ந்தெடுத்து வணங்குகின்றனர். வாழ்வியல் சடங்குகளுக்கு நட்சத்திரங்களே அடிப்படையாக உள்ளன. மனிதனின் பிறப்பு ஜாதகம் நட்சத்திரத்தை வைத்தே கணக்கிடப் படுகிறது. மாதங்களின் பெயர்களும் நட்சத்திரத்தை அடிப்படையாகக் கொண்டே வழங் கப்படுகின்றன.

நட்சத்திரங்களின் கால அளவு 4 பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 27 நட்சத்திரங்களுக்கு 108 பாகங்களாக உள்ளன. ஒன்பது பாகங்களைக் கொண்டது ராசி. ராசிகள் மேஷம் முதல் மீனம் வரை பன்னிரண்டாக உள்ளன.

வருடதேவர்கள், மாத தேவர்கள், நட்சத்திரதேவதைகள், கிரக தேவதைகள் எனப் பலவிதமான கால ஓட்டத்தினைக் கணிக்கும் தேவர்கள் வணங்கப்படுகின்றனர். அவர்கள் பற்றிய புராணச் செய்திகளைத் தொடர்ந்து காணலாம். முதலாவதாக, அசுவினித் தேவர்களைக் காண்போம்.

அசுவினித் தேவர்கள்

அசுவினித்தேவர்கள் இரட்டையராவர். இவர்கள் விவச்சுரன் என்னும் சூரியனின் குமாரர்கள். விவச்சுரனான சூரியன் மிகுந்த தேஜஸ் மிக்கவனாக இருந்தான். அவன் துவஷ்டா என்னும் பொறியியல் கலையின் தேவனது மகளான சஞ்ஞை என்னும் பெண்ணை மணந்தான். அவளால் அவனது ஒளியையும், வெப்பத்தையும் தாங்க முடியவில்லை. அதனால் தன்னுடைய நிழலில் இருந்து தோனறிய ப்ரத்யுஷாவைத் தனக்குப் பதிலாக வைத்து விட்டு பெண்குதிரை வடிவங்கொண்டு சோலையில் இருந்தாள்.

அதை அறிந்த விவச்சுரன் வலிய ஆண்குதிரையாக வடிவம் கொண்டு அவள் இருக்குமிடத்திற்குச் சென்றான். அவள் அவன் வருவதை அறிந்து ஓடினாள். அவனும் விடாது துரத்தினான். ஓரிடத்தில் ஓட முடியாது அவள் திரும்பினாள். அவனது காமக்கனல் அவளது முகத்தில்பட்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவள் முகத்திலிருந்து குதிரை முகத்துடன் அழகியதேவர்கள் தோன்றினர். அவர்களே அசுவினித் தேவர்கள் என்று அழைக்கப் பட்டனர்.

இவர்கள் பெயர்கள் முறையே நாசத்தியன், தசரன் என்று சில நூல்கள் கூறுகின்றன. இவர்கள் அசுவினி நட்சத்திரத்தை இடமாகக் கொண்டு அதில் வசிக்கின்றனர். இவர்கள் தேவ மருத்துவர்களாகப் போற்றப் படுகின்றனர்.

இவர்கள் சியவனர் என்பவருக்கு இளமை அளித்தனர்.

சியவனர் மிகுந்த தவசீலர். வயது முதிர்ந்தவர். ஒரு முறை இவர் தவம் மேற்கொண்டிருந்த போது இவரைச் சுற்றி புற்று எழுந்துமூடியது. இவரது கண்களில் இருந்து ஒளிச்சுடர்கள் புற்றையும் கடந்து வெளி வந்து கொண்டிருந்தது.

காட்டிற்கு வேட்டையாட வந்த சையாதி என்னும் மன்னன் விலங்குகளைத் துரத்தியவாறே அவ்விடம் வந்தான். அவனுடன் அவனது மகளான சுகன்னியும் வந்திருந்தாள். அவள் புற்றிலிருந்து ஒளி வெளிப் படுவதைக் கண்டாள். ஒரு குச்சியை எடுத்து ஒளிவந்த பாதையில் குத்தினாள். அதனால் முனிவர் கண்கள் குருடாகி விட்டன. அவர் தவம் கலைந்து எழுந்தார்.

இளவரசியும், மன்னனும் அஞ்சி நடுங்கினர். மன்னன் தவறுக்குப் பரிகாரமாக மகள் சுகன்னியை (இளவரசியை) முனிவருக்குத் திருமணம் செய்து வைத்தார். முனிவர் மிக வயோதிகராக இருந்த போதிலும், தான் செய்த தவற்றிற்குத் தண்டனையாக இளவரசி அவரை மணந்து கொண்டான். அவருடனேயே தங்கிப் பணி விடைகள் செய்து வந்தாள். அவளது தியாகத்தையும் கற்பின் திறத்தையும் கண்டு மகிழ்ந்த



அசுவினித் தேவர்கள் முனிவருக்கு என்றும் மாறாத இளமையை அளித்ததுடன், மருந்துகளைச் செய்யும் முறையையும் அதைப் பயன்படுத்தும் வழிகளையும் சொல்லிக் கொடுத்தனர்.

முனிவரும் அவரது தேவியும் இன்னும் இளமையுடன் வாழ்ந்து வருவதாக நம்புகின்றனர்.

சியவனர் ஒரு பெரிய வேள்வியைச் செய்தார். அதில் மிகுந்த சிறப்புக்களை அசுவினித் தேவர்களுக்கு அளித்தார். அதை ஏற்றுக் கொள்ளாத இந்திரன் வஜ்ராயுதத்தால் அவர்களைத் தாக்க வந்தான். அவர்கள் அவனது கை செயலற்றுப் போகும்படிச் செய்து விட்டனர்.

தனது தவற்றை உணர்ந்த இந்திரன் அவர்களையும் தேவர்களாக அங்கிகரித்து வேள்விகளில் அவிசையும், சோமரசத்தையும் பெறும் உரிமையை வழங்கினான். அதுமுதல் அவர்கள் தேவர்களின் மருத்துவர்களாக இருந்து வருகின்றனர்.

குதிரை முகம் கொண்டவர்களான இவர்கள் கையில் மருந்துக் குப்பிகள் கொண்ட பெட்டியை ஏந்தியுள்ளனர். இவர்கள் அசுவினி நட்சத்திர மண்டலத்தில் இருக்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுவிஸ் அன்பர் திரு. கணேஷ்குமார் அவர்களுக்கு இனிய நல்வரவேற்பு.

மலாய் பல்கலைக் கழகத்தின் ஆசிய வியல் துறையும், திருமுருகன் திருவாக்கு திருப்பீடமும் இணைந்து **அனைத்துலக முருக பக்தி மாநாட்டைக்**கடந்த 9.8.2012- 12.08,2012 வரை மலேயா பல்கலைக்கழக வளாகத் தில் நடத்தினர்.அவ்விழாவின் நிறைவில் அடுத்த அனைத்துலக பக்தி மாநாடு சுவிசர்லாந்தில் நடைபெறும் என்றும், அதனை **திரு.கணேஷ் குமார்** முன்னெடுத்து நடத்துவார் என்றும் அறிவிக்கப்பட்டதுடன்,மாநாட்டுப் பொறுப் பை அளிக்கும் வகையில் ஞானச் செங்கோல் அவருக்கு அளிக்கப்பட்டது.

திரு.கணேஷ்குமார் அவர்கள் மாநாட் டுக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின் றார். அவர் அண்மையில் சென்னைக்கு வருகை தந்தார். அவருக்கு 07-07-13 ஆம்நாளில் சிறப்பான வரவேற்பை அளித் ததுடன், "**இறைபணிச் செல்வர்**" என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தனர். விழா ஏற்பாடுகளைக் கலைமகன் மற்றும் திருப்பீடத்தின் ஆசிரியரான சிவத்திரு கீழாம்பூர் சங்கர சுப்பிரமணியன் சிறப்பாகச் செய்திருந்தார்.

இவ்விழாவில் தமிழ் அறிஞர்கள் சிட்டி யின் மகன்திரு.சங்கர் பூசை.ச.ஆட்சிலிங்கம், நித்யானந்தம், கௌசிக்ராஜா, கலைமா மணி துரை, சினிமா இயக்குநர் கொற்றவன் ஆகி யோர் கலந்து கொண்டனர். தொழி அதிபரும் ஆன்மிகவாதியுமான**திரு.ராஜ்குமார்** நன்றியு ரையாற்றினார்.

ஆசிரியர் விழாவில் கலந்து கொண்டு குமார் அவர்களின் பணி சிறக்க வாழ்த் தினார்கள்.

- முருகன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதிரண சண்டேசுவரக் கிருகம்

தொடர்ச்சி

சென்ற இதழில் பல்லவ மாமன்னன் பரமேசுவரவர்மனால் மாமல்லபுரத்தில் பாறையைக் குடைந்து அமைக்கப்பட அதி ரண சண்டேசுவரக்கிரகம் என்னும் ஆலயத்தைப் பற்றிய கட்டுரை வெளியாகி இருந்தது.

அதில் சாளுவன் குப்பத்தில் உள்ள புலிக்குகைதான் அதிரண சண்டேசுவரம் என்ற செய்தி உள்ளது. அது சரியானதல்ல. புலிக் குகைக்கு அருகில் அமைந்திருக்கும் குகைக் கோயிலே அதிரண சண்டேசுவரக் கிரக மாகும். இக்குகைக் கோயிலின் இருபுறமும் கல்வெட்டுக்கள் உள்ளன. தென்புறத்தில் படி போன்ற அமைப்பும் அதன் அருகில் கொற்றவை மகிஷனுடன் போரிடும் காட்சி செதுக்கப்பட்டுள்ளது. தேவி வலது காலைத் தாமரை மலர் மேல் ஊன்றி, இடது காலைச் சிம்மத்தின் மீதமர்த்தி, வில் பிடித்துப் போரி டுகிறாள். அது ஆறு திருக்கரங்கள், அவளின் பின் கணங்களும் போர்க்கோலம் பூண்டு விளங்குகின்றன. எதிரே எருமைத் தலை அரசன் எதிர்த்து நிற்க முடியாமல் புறமுது கிட்டு ஓடுகிறான். இச்சிற்பம் எழில் வாய்ந்த காட்சியாக அமைந்துள்ளது.

அருகில் பரமேஸ்வரவர்மனின் மகனும், ராஜசிம்மன் என்று அழைக்கப்பட் டவனுமான இரண்டாம் நரசிம்மவர்மனின்



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கல் வெட்டு உள்ளது. பதினேழு வரிகள் கொண்ட இக்கல்வெட்டின் முன்பகுதி தன் தந்தையின் பெருமைகளையும் அவனால் இக்கோயில் குடைந்து உருவாக்கப்பட்ட தையும் தெரிவிக்கும் அவன் தன்னைப் பற்றியும் கூறிக் கொள்ளுகிறான். அதன் சுருக்கத்தைத் தொடர்ந்து காணலாம்

செல்வம் பொருந்திய, பகைவரின் ஆண வத்தை அகற்றிய அத்தியந்த காமனுடைய செல்வத்தின் கருவூலத்தில் (பூமி யில்) நாட்டம் கொண்டவனும், சிவபூசையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவனுமாகிய பரமேசுவரவர்மனின் தலைமீது பல மணிகள் பொருந்திய தாமரை (மலரும் அகன்ற பொய்கை) போன்று சிவனது அபிஷேக ஜலம் நிரம்பியிருக்கிறது. அந்த அகன்ற பொய்கை யின் நடுவில் சங்கரன்(சிவன்) வீற்றிருக் கிறார்.(இவன் உருத்திராட்சத்தால் ஆன சிவலிங்கத்தைத் திருமுடியாக அணிந்திருந் ததாகக் கூறுகின்றனர்.) அவனால் கட்டப் பட்ட கயிலாயத்திற்கு இணையான சிவ பெருமானின் மாளிகை (கோயில்) இப்புவி யின் நடுவில் திகழ்கிறது. பக்தி பொருந்திய மனதுடனும் தன்னை அலங்கரித்துக் கொள் வதில் விருப்பம் கொண்டவனும் பூமியைத் தாங்குகின்றவனுமாகிய (அரசன்) ஸ்ரீபரன் பல்லாண்டு வாழட்டும்.

அதிரணசண்டன் (பரமேஸ்வரன்) அதிரணசண்டேஸ்வர ஆலயம் அமைத் தான். கணங்கள் மற்றும் மலைமகளுடன் கூடிய பசுபதியான சிவன் (அவன்மீது) நிலையான அன்பு செலுத்தட்டும். அதிரண சண்டன் என்று அழைக்கப்படும் இவன் சிவபக்தியுடனும், தாங்க முடியாத இந்தச் செல்வம் நிரம்பிய இப்பூபாரத்தைத் தாங்கு பவனாகவும், அசாதாரணமான தானத்தை அளிக்கிறவனாகவும், நிர்வாகத்திறன் பெற்றிருக்கிற, இப்புவியின் தலைவனாக வும் இருக்கின்ற இவனுக்கு அஷ்டமூர்த்தி யான அத்திரண சண்டேஸ்வரர் நன்மை அளித்துக் காக்கட்டும்.

பிரம்மாவினாலும், விஷ்ணுவினா லும், நாரதராலும் மற்றும் கந்தனாலும் அறிய முடியாத சங்கீத ஞானத்தை காலகாலன் (அதிரணசண்டன்) மாமல்லன் பெற்றிருந்தான். ஓம் ரதனஞ்ஜயஹ சங்கராம தீரஹ ஓம் என்பதாகும். இக்கல்வெட்டு ராஜசிம்மன் தந் தந்தையான பரமேஸ்வர வர்மன் மீது கொண்டிருந்த பக்தியைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

ஆதிசைவ சிவாச்சாரியார் சேவா சங்க மகளிர் அணியின் சுமங்கலி பூஜை

அரியலூர் மாவட்டம் உடையார் பாளையத்தை அடுத்த நாயகனைப் பிரியாள் என்னும் ஊரில் தியான மண்டபத் திறப்பு விழாவும், அகில இந்திய ஆதிசைவ சிவாச்சாரியார்களின் மகளிர் அணி நடத்தி சுமங்கலி பூஜையும் 5.4.2013 வெள்ளிக்கிழமை இனிதே நடைபெற்றன. சிறப்பு அழைப்பாளராக பிள்ளையார்பட்டி டாக்டர் பிச்சை சிவாச்சாரியார் மற்றும் சேவா சங்கப் பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். மகளிர் அணி மாநிலத் தலைவி திருமதி. கௌரி குமார் செயலார் எஸ். காமாட்சி ஷண்முகம் உள்ளிட்ட மகளிர் அணியினர் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். 108 சுமங்கலிகளுக்கு சிறப்புபூசை நடைபெற்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்வர்ணகௌரி மண்டல வழிபாடு

சென்ற 31.03.2013 ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ சுவர்ணகௌரி பூஜை சிறப்பாக நடைபெற்றது. அப்பூசையில் அம்பிகையின் மண்டலம் சிறப்புடன் வழிபடப்பட்டது. அன்பர்கள் பலர் அந்த மண்டலம் பற்றிய செய்திகளை அறிய ஆவலாக இருந்தனர், அவர்களுக்காக இங்கே இது வெளியிடப்படுகிறது.

மண்டலம் என்பதற்குச் சிறப்பு மிக்க பகுதி என்பது பொருள். இலக்கியங்களும் வரலாறும் நாட்டைச் சோழமண்டலம், பாண்டி மண்டலம், சேரமண்டலம், தொண்டைமண்டலம் என்று பிரித்துச் சிறப்பித்துள்ளது, இங்கு எண்ணத் தக்கதாகும்.

ஒரு குறிப்பிட்ட சிறப்புகளைக் கொண்ட பகுதிக்கு அதன் சிறப்புக்கேற்ப மண்டலம் என்று பிரித்துப் பெயர் வழங்கப்படுகிறது. அதுபோலவே பெரும் தெய்வம் தம் ஏவலர் காவலர்களுடன் வாழும் தனியிடமும் மண்டலம் எனப்படும்.

வானமண்டலத்தில் சிறப்புப் பொருந்திய நட்சத்திரங்களின் கூட்டம் இனம் காணப்பட்டுத் துருவமண்டலம், சப்தரிஷிமண்டலம் எனப் பெயரிடப்பட்டுள்ளதும் இங்கே சிந்திக் கத்தக்கதாகும்.

தெய்வங்களை அதன் பரிவாரங்களுடன் சிறப்புடன் வழிபடஅமைக்கப்பட்டதே மண்டல வழிபாடு ஆகும். மண்டல வழிபாட்டின் விளைவே பின்னாளில் சக்ர வழிபாடுகளாக மாற்றம் பெற்றுள்ளன.

சிவாகமங்கள், கௌரிலதா மண்டலம், அஷ்டலிங்க தீக்ஷாமண்டலம், எனப் பல விதமான மண்டலங்களைப் பற்றியும், அதைப் பூசிக்க வேண்டிய முறைகளைப் பற்றியும் விரிவாகக் கூறுகின்றன. ஆகம வழிபாடுகளின் மண்டல வழிபாடுகள் தனிச் சிறப்புப் பெற்றுள்ளன. ஜைன பௌத்த சமயங்களிலும் மண்டல பூஜைகள் சிறப்பிடம் பெற்றுள்ளன.

தரையைப் பசுஞ்சாணத்தால் மெழுகி அதன் மீது பட்டுத் துணியை விரித்து, அதில் வண்ணப் பொடிகளைக் கொண்டு மண்டலங்களை வரைந்து பூசிப்பதே பண்டைய வழக்கமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



மண்டலங்களுக்கு விதானம் அமைப்பர். இந்த விமானங்களிலும் பலவிதமான தேவதைகளை மந்திரப் பூர்வமாக எழுந்தருள வைத்து வழிபடுகின்றனர்.

நாம் இப்போது காணப்போவது சுவர்ண கௌரீ வழிபாட்டு மண்டலமாகும். இதன் மையத்தில் ஏழு கடல்களும் எழு கோணத்தில் காட்டப்பட்டுள்ளன. இதன் மத்தியில் அமைந்ததும் நவரத்தினங்களாக ஜொலிப்பதுமான மகராலயத்தில் சுவர்ண மயமான மீன் மீது சுவர்ண கௌரி வீற்றிருக்கின்றாள்.

பெருங்கடல் ஏழிற்கும் தலைவர்களான கடலரசர்கள் எழுவரும் வெண் சாமரங்களை வீசி, அவளைத் துதித்துக் கொண்டிருக்கின்றனர். வருணன் உள்ளிட்ட கடல் அரசர்கள் தம்மிடம் செல்வம் நிறைந்திருக்கக் காரணமான அவளைச் சதா துதித்துப் போற்றிக் கொண்டிருக்கின்றனர்.

மகராலயத்தை நடுவில் கொண்டுள்ள அந்த எழுகோணத்தைச் சுற்றி அமைந்த எட்டிதழ்த் தாமரைகளில் அஷ்ட மாத்ருகைகளும், அஷ்ட திக்தேவியரான இந்திராணி, சுவாகா முதலியோரும் வீற்றிருந்து செல்வத்திற்கு அதிபதியாக விளங்கும் கௌரி தேவியைச் சதாகாலமும் அர்ச்சித்துக் கொண்டிருக்கின்றனர்.

அதைச் சுற்றி அமைந்த நவகோணத்தில் நவநிதித் தேவதைகளும் வீற்றிருந்து அம்பிகையின் அருள் பெற்றவர்களுக்கு தம்மிடமிருக்கும் நிதியங்களை வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றனர். நவநிதிகளாவன. 1.கச்சநிதி, 2.கற்பநிதி, 3.சங்கநிதி, 4.பத்மநிதி, 5.நந்தநிதி 6. நீலநிதி, 7. மகாநிதி, 8.மகாபத்மநிதி, 9.முகுந்தநிதி என ஒன்பதாகும்.

இந்த அமைப்பைச் சுற்றி மலைகள், காடுகள், கடல்கள் ஆகிய மூன்று அரண்கள் மூன்று வட்டங்களாக உள்ளன. இவை மக்களுக்கு மலைபடு செல்வங்கள், காடுகள் அளிக்கும் செல்வங்கள், கடல்கள் அளிக்கும் செல்வங்களைக் குறிக்கின்றன. மலையைச் சிவப்பு வட்டமும், காடுகளைப் பச்சை வட்டமும், கடலை நீலவட்டமும் குறிக்கின்றன.

இந்த மூவட்டங்களைச் சுற்றி நாற்புறம் வாயில்களைக் கொண்ட கோட்டை உள்ளது. இதில் கிழக்கில் சுவர்ண கணபதியும், வடக்கில் குபேரனும், தெற்கில் மணிபத்திரனும் மேற்கில் ஹேம சாத்தனும் காவலர்களாக உள்ளனர்.

இவ்வகையில் செல்வத்திற்கு அதிபதியாக விளங்கும் தெய்வங்கள் தொழுது நிற்கும் சுவர்ணகௌரியையும், அவளது ராஜ கொலுவிருக்கும் கோலத்தைக் குறிப்பதான ஸ்வர்ணகௌரி மகா மண்டலத்தையும் அன்பர்கள் கொண்டாடுகின்றனர். இதை விதிப்படி பூசிப்பவர்கள் சகல ஐஸ்வர்யங்களையும் பெற்று வாழ்வில் மேன்மை பெற்று மனஅமைதியுடன் வாழ்வார்கள் என்பது திண்ணமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முத்துத் தாண்டவர்

கர்நாடக இசை உலகில் பெருமைமிக்கவர்களாக ஸ்ரீதியாகப்பிரம்மன், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் ஆகிய மூவர் போற்றப்படுகின்றனர். இறையருள் பெற்ற இவர்கள் வடமொழியிலும், தெலுங்கிலும் அற்புதமான கீர்த்தனைகளைப் பாடியுள்ளனர். இவர்களைப் போலவே தமிழில் கீர்த்தனைகளைப் பாடிய மூவர் சிறப்பித்துப் போற்றப் படுகின்றனர். இவர்கள் முத்துத்தாண்டவர், அருணாசலக் கவிராயர், மாயூரம் வேதநாயகம் பிள்ளை, என்பவர்களாவர். இவர்களுள் இசைச் செல்வர் முத்துத் தாண்டவர் வரலாறு பற்றிய சிறுகுறிப்பை இங்கே காணலாம்.

சிதம்பரத்திற்கு அருகிலுள்ள சீர்காழியில் இசைப்பயிர் வளர்க்கும் இசைவேளாள குலத்திலே தோன்றியவர் முத்துத் தாண்டவர். இவரது இயற்பெயர் தாண்டவன் என்பது. இவர் இளவயது முதல் கோவில் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார் என்றும், பின்னர் உடல் நலக்குறைவு காரணமாக அந்தச் சேவையை நிறுத்தினார் என்றும் இசை ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

சீர்காழியில் இசைக்கலையிலே மிகவும் தேர்ச்சி பெற்ற சிவபாக்கியம் என்ற நடனமாது வசித்து வந்தார்.

அவருடைய சங்கீதத் திலே மயங்கிய முத்துத்தாண்டவர் பெரும் பொழுதை அவருடனேயே கழித்துவந்தார்.

அந்த நடனமணியின் பெற்றோருக்கும் இவருடைய பெற்றோருக்கும் வழிவழியாகத் தீராப் பகையிருந்தாலும், முத்துத் தாண்டவருக்கு அவரின் இசையை விட்டுப் பிரிய மனம் இடம் தரவில்லை. இதுகண்டு எரிச்சலடைந்த தாண்டவரின் பெற்றோர் அவரை வீட்டை விட்டுத் துரத்திவிட்டனர்.

வீட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட முத்துத்தாண்டவர் கோவில் பிரகாரத்திலே தேர் நிலை பெற்றிருக்கும் இடத்தில் பசி மிகுதியில் கண்ணயர்ந்து உறங்கும் வேளையில் ஒரு சிறுமி அவரை எழுப்பி, அவரின் துயரைப் போக்கி, "நீ சிதம்பரம் சென்று இறைவனைப் புகழ்ந்து பாடல்களைப் பாடு" என்று கூறியதாகவும், அதற்கு முத்துத் தாண்டவர் தனக்குப் பாடல் எழுதவோ, பாடவோ தெரி யாது என்று சொன்னதாகவும், அதற்கு அச்சிறுமி, "நீ நடராஜாவின் சன்னதி சென்று அங்கு முதன்முதலில் உன் காதில் விழும் சொல்லை முதலடியாகக் கொண்டு ப்ாடல் இயற்று" என்று கூறி மறைந்ததாகவும் கூறப் படுகின்றது.

உடனே அவர் சிதம்பரத்திற்குச் சென்று ஆடல் வல்லானின் திருமுன்னர் நின்றபோது முதலில் கேட்ட சொல்லாகிய"**பூலோக கைலாச கிரி**," என்பதனால் ஆரம்பித்துப் பாடல் இயற்றலானார்

அன்று முதல் அவர் கோயிலில் கேட்கும் முதல் சொல்லையே தொடக்கமாகக் கொண்டு பாடல் புனையலானார். ஒருநாள் எந்தச் சொல்லுமே காதில் விழவில்லை. அப்போது அவர் இயற்றிய பாடல், "பேசா திரு, நெஞ்சமே" என்று தொடங்குவது ஆகும்.

தமிழில் நிறைய பதங்களை இயற்றிய பெருமை முத்துத் தாண்டவருக்கே உரியது. இவர் இயற்றிய பாடல்களில் மிகவும் பிரபலமடைந்த பாடல்கள் **சேவிக்க வேண்டுமய்யா சிதம்பரம்** என்று தொடங்குவது.

பல்லவி

சேவிக்க வேண்டுமய்யா - சிதம்பரம்
சேவிக்க வேண்டுமய்யா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சேவிக்க வேண்டும் சிதம்பரம் மூர்த்தியாம்
தேவாதி தேவன் திருச்சந்நிதி கண்டு

அனுபல்லவி

காரானை மாமுகத் தைந்து கரத்தானை
கற்பக ராயனை முக்குறுணியானை
சீரார் புலியூர்ப் பதிவாசல் தனில் வாழும்
தேவர் சிறைமீட்டும் சேவற் கொடியானை-(சேவிக்க)

சரணம்

சிட்டர் பரவுந்த திருமூலத்(து) அரனை
சிற்றம்பலமென்னும் பேரம்பலத்தானை
அட்டதிக்கும் புகழ் அம்பல வாணனை
ஆண்டவனைத்தில்லைத் தாண்டவராயனை(சேவிக்க)

முத்துத்தாண்டவர் இயற்றிய அரு மருந்து எனத் தொடங்கும் பாடல் வருமாறுஅருமருந்தொரு தனிமருந்திதை

அம்பலத்தே கண்டேனே
திருமருந்துடன் சேரு மருந்து
தில்லயம்பலத் தொரு மருந்து
இருவினைகள் அறுக்கும் மருந்து
ஏழையடியார்க்(கு) இரங்கும் மருந்து -
அருகொன்றை தும்பை அந்த மருந்து
கோதை மீதில் படர்ந்த மருந்து
மன்றுளே நின்று ஆடும் மருந்து
மாணிக்க வாசகர் கண்ட மருந்து
இந்திரர் வானவர் காணா மருந்து
இருடிகள் தமக்(கு) எட்டா மருந்து
சந்திரர் சூரியர் தேடும் மருந்து
தானே முளைத்துத் தழைத்த மருந்து

தில்லை அம்பலவாணரின் பெருமை களை விளக்கும் ஆடிக்கொண்டார் எனத் தொடங்கும் அபூர்வப் பாடல் இதோ.

பல்லவி

ஆடிக் கொண்டார் அந்த வேடிக்கை காணக் - கண்
ஆயிரம் வேண்டாமோ

அனுபல்லவி

நாடித் துடிப்பவர் பங்கிலு றைபவர்நம்பர்,
திருச்செம்பொன் அம்பலவாணர்- (ஆடிக்கொண்டார்)

சரணம்

பங்கய பாதச் சிலம்பசைந்தாட
பாதச் சதங்கைகள் கிண் கிணென்றாட
பொங்கமுடனே உரித்துத் தரித்த
புலித் தோல் அசைந்தாட
செங்கையி லேந்திய மான் மழுவாட
செம்பொற் குழைகள் முயலகனாட
கங்கை இளம்பிறை செஞ்சடையாட
கனக சபை தனிலே-(ஆடிக்கொண்டார்)

பரத நாட்டிய நிகழ்ச்சிகளில் பெருமளவு பாடப்பெறுபவை"தெருவில் வாரானோ," போன் றவை. முதன்முதலில் தமிழில் கீர்த் தனை வடிவில் பாடல் இயற்றிய பெருமை இவ ரையே சாரும். இவர் சில நூறு பாடல்கள் புனைந் திருந்தாலும், நமக்குக் கிடைப் பவை 60 பாடல்களும், 25 பதங்களுமேயாகும்.

இவருடைய பதங்கள் தொடக்கக் காலம் முதலே கீர்த்தனங்களோடு சேர்த்துப் பதம் என்று பிரித்துத் தனியே எண்ணிட்டு அச்சிடப்பட்டு வந்துள்ளன. பதம் என்பது அகப்பாட்டு, அதாவது நடராசப் பெருமான் மீது காதல் துறையில் அமைந்த பாடல்கள்.

இவருடைய பதங்களில், தலைவி நேரே பேசுவதாக 14ம், தோழி தலைவனைப் பார்த்துச் சொல்லுவதாக 3ம், தலைவி தோழியிடம் பேசுவதாக 6ம், ஏசலாக 1ம் அமைந்துள்ளன.

மூன்றாவது பதத்தில் பொற்படியே கொடுத்து எப்படியாகிலும் அப்படி இப்படி செய்ததற்கு ஒப்பினேன் என்று அமைந்தி ருப்பது இவருக்கு நடராசப் பெருமான் திருப்படியில் பொற்காசு கொடுத்தார் என்ற வரலாற் றுச் செய்தியை நினைவூட்டுகிறது. இதன் சரணங்கள் மூன்றிலும் ஒவ்வொரு தொடரையும் எதுகை யில் அமைத்திருக்கிறார்.

-தொடரும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாதவச் சிவஞான முனிவர் திருநட்சத்திர விழா

வடசொல் கடல் கடந்து தென்தமிழ் சொற்களுக்கு எல்லை கண்ட மாபெரும் அறிஞர் மாதவச் சிவஞான சுவாமிகள்.

1753ல் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள விக்ரமசிங்கபுரத்தில் சைவ வேளாள மரபில் வந்த ஆனந்தக்கூத்தர் - மயிலம்மையாருக்கு மகனாகத் தோன்றிய இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் முக்களாலிங்கம்என்பதாகும். இது திருநெல்வேலி பாபநாசத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் திருப்பெயராகும்.

இவர் திருவாவடுதுறை ஆதினத்து பத்தாவது குருமகாசந்நிதானம் பட்டம் வேலப்பதேசிகர் காலத்தில் மடத்திற்கு வந்த துவிதீய ஆசாரியர். பேரூர் வேலப்ப தேசிகரிடத்து சைவ சந்நியாசமும் தீக்ஷையும் பெற்று சிவஞான யோகிகள் என்ற தீக்ஷாநாமம் பெற்றார்கள்.

சுசீந்திரம்,காஞ்சிபுரம் திருவாவடு துறை, சென்னை எனப் பல தலங்களில் தங்கியிருந்தவர். கச்சியப்ப முனிவர் தொட்டிக் கலை சுப்பிரமணிய முனிவர்முதலிய பன்னிருவருக்கு மெய்ஞ்ஞான குருவாக விளங்கியவர்

இவர் சிவஞான போதத்திற்கு வரைந்த சிவஞான மாபாடியம் என்னும் பேருரை புகழ் பெற்றதாகும். சித்தாந்த செந்நெறிக்கும் செந்தமிழுக்கும் ஆக 28 நூல்களை அருளிச் செய்து பெரும் தொண்டாற்றியுள்ளனர். 1785ல் சித்திரை ஆயில்ய நாளில் திருவாவடுதுறையில் இவர் சிவப்பேறு பெற்றார்கள். திருவாவடுதுறை பெரிய தோப்பில் இவர் சமாதித்தலம் உள்ளது.

24வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சார்ய தேசிகர் விக்ரமசிங்கபுரம் சுசீந்தரம், காஞ்சிபுரம், பேரூர், திருவாவடுதுறை ஆகிய ஆறு இடங்களிலும் 20.4.13 சனிக்கிழமை இவரது திருநட்சத்திர வழிபாடு சிறப்பாக நடைபெற்றது. சிவஞானத் தெள்ளமுதம் என்ற நூல் இந்த இடங்களில் வெளியிடப்பட்டது.

திருவாவடுதுறையில் நடைபெற்ற விழாவில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் நூலை வெளியிட, முனைவர் பேரா.ம.வே. பசுபதி முதல் பிரதியை பெற்றுக் கொண்டார்கள். குருமகா சந்நிதானம் அவர்களால் கோவை திரு.லஷ்மிபதி ராஜு அவர்களுக்கு ரூ.5000/- பொற் கிழியும் சித்தாந்த செம்மணி என்னும் விருதும் வழங்கப்பட்டன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

அரனருள்

எண் - 3/95, 2-ஆவது தெரு, ஸ்ரீ கிருஷ்ணா நகர் மதுரவாயில், சென்னை-600095.
Tel: 23782333 Mobile: 9444156335. Email: aranarul@yahoo.co.in

பத்தாம் ஆண்டு

திருமுறை இசை ஆராதனை விழா

வேத சிவாகம புராண இதிகாச தோத்திர சாத்திர சைவசமயக் கருத்தரங்கம்

அழைப்பிதழ்

அன்புடையீர்!! அரனருள் பத்தாம் ஆண்டு திருமுறை இசை ஆராதனை விழா, வரும் 03-06-2013 திங்கள் முதல் 14-06-2013 வெள்ளி முடிய பன்னிரண்டு தினங்கள், காலை 8-00 மணி முதல் இரவு 8-00 மணி வரை, சென்னை தமிழிசைச் சங்கம் இராஜா அண்ணாமலை மன்றத்தில் வெகுசிறப்பாக நடைபெறவுள்ளது.

முதலாம் நாள் 03-06-2013 திங்கட்கிழமை மதியம் 12-00 மணியளவில்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

பூஜ்யஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் அவர்கள்

எழுந்தருளி விழாவினைத் துவக்கிவைத்து ஆசி வழங்கியருளுவார்கள்.

நிறைவு நாள் 14-06-2013 வெள்ளிக்கிழமை காலை 10-00 மணியளவில்

திருவாவடுதுறை ஆதீனம் 24-ஆவது குருமகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

எழுந்தருளி நிறைவுநாள் விழா ஆசி வழங்கியருளுவார்கள்.

இவ்வாண்டு சிறப்புத் திருமுறை விருது பெறுபவர்கள்

"திருமுறை செஞ்சொற் கவிமணி" விருது பெறுபவர் **பேராசிரியர்,திரு.ம.வே.பசுபதி**

"பண்ணிசைக் கலாநிதி" விருது பெறுபவர் **குடந்தை.திரு.வெ.லக்ஷ்மணன்**

பன்னிரு தினங்களும் மாலை 05-00 மணி முதல் 06-00 மணி வரை

"திருவிளையாடற் புராணம்" தொடர் விரிவுரை நடைபெறும்.

நிகழ்த்துபவர்: **செந்தமிழ் அரசு, திரு.K.சிவக்குமார் M.E.,** அவர்கள்.

அன்பர்கள் அனைவரும் பன்னிரண்டு தினங்களும் விழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.

சாமி.தண்டபாணி	சபா. சண்முகசுந்தரம் B.A.,
ஸ்தாபகர் - அரனருள்	தலைவர் - அரனருள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சமய வாழ்வில் ஆடும் யானையும்

ஆடும் யானையும், சிவவழிபாட்டில் தனியிடம் பெற்றுள்ளன. ஆடு முரட்டுத் தனம் மந்தபுத்திக்கும், யானை பலமும் அறிவுக்கும் எடுத்துக்காட்டுகளாகத் திகழ் கின்றன.

ஆடு அக்னியிடம் இருந்து வெளிப் பட்டு அவனுக்கு வாகனமாக இருக்கிறது. சிவபெருமானின் நெற்றிக் கண்ணில் இருந்து தோன்றிய தீப்பொறிகளில் இருந்து உற்பவித் ததால், முருகப் பெருமானுக்கு அக்னிஜாதன் என்பது பெயரானது. முருகனுக்கும் ஆட்டுக் கடா வாகனமாக இருக்கிறது.

ஒரு சமயம் நாரதர் மிகப்பெரிய வேள்வி ஒன்றைச் செய்தார். அப்போது அவர் ஓதிய மந்திரங்களில் பல பிரயோகங்கள் மாறி விட்டதால் உரிய பலனுக்குப் பதிலாக சிவந்த கண்களையும் முரட்டுத்தனத்துடன் வலிய உடலைக் கொண்ட ஓர் ஆடு



தோன்றியது.அது எட்டுத் திசையிலும் தாவிப் பாய்ந்து எதிர்ப்பட்டவற்றை எல்லாம் முட்டித் தள்ளி அட்டகாசம் புரிந்தது. அதை யாராலும் அடக்க முடியவில்லை. நாரதர் கலங்கி முருகனைச் சரணடைந்தது. அதை அடக்குமாறு வேண்டினார். முருகன் வீரபாகு தேவரை அனுப்பி அதைப் பிடித்து வரும் படிக் கூறினார்.

தாவிக் குதித்து முட்ட வந்த ஆட்டை வீரபாகுதேவர் அடக்கிக் காதைப் பிடித்து இழுத்து வந்து முருகன் சந்நிதியில் விடுத் தார். முருகன் அதன் மீதேறி எட்டுத் திசை யிலும் அதை நடக்கச் செய்து அடங்கி ஒடுங்கியிருக்கும்படிச் செய்தார். அன்று முதல் ஆடு அவருக்கு வாகனமாயிற்று.

அக்னியின் குணநலன்களும், முருக னின் அருளும் பெற்ற செவ்வாய் பகவா னுக்கும் ஆடு வாகனமாக இருக்கிறது.

ஆட்டுத்தலை உள்ளவர்களையும் புராணங்களில் காண்கிறோம். பிரம்மனின் புதல்வனும் அன்னை பராசக்தியைத் தாட்சாயனி எனும் பெயரில் வளர்த்தவனு மான தட்சன் சிவபெருமானை மதியாது பெரிய வேள்வி யைச் செய்தான். அதனால் கோபித்த சிவபெருமான்,"தட்சனுடைய யாகத்தை அழித்து வருக" என்று வீரபத்திரரை அனுப்பினார். கோபத்துடன் சென்ற வீரபத்திரர் தட்சனுடைய யாகத்தை அழித்த துடன், அவனது தலையையும் வெட்டி அவனைக் கொன்றார். பின்னர், தேவர்களின் வேண்டுகோளை ஏற்று ஓர் ஆட்டுத் தலையைப் பொருத்தி, அவனை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உயிர்ப்பித்தார். அன்று முதல் அவன் ஆட்டுத் தலையுடன் இருந்து வருகிறான்.

ஆடும் யானையும் முருக வழிபாட்டில் தனியிடம் பெற்றுள்ளன. இவை இரண்டும் முருகனுக்கு வாகனமாக உள்ளன. திருப்பரங்குன்றில் உள்ள முருகன் திருவுருவத்தின் பீடத்தில் ஆடும் யானையும் அமைக்கப் பட்டுள்ளன.

ஆட்டுத்தலையும் யானை உடலும் கொண்ட மாந்தர்களையும் புராணங்களில் காண்கிறோம்.

ஆட்டுத் தலையும், ஒற்றை யானைக் காலையும் கொண்ட தெய்வம் உருத்திர கணத்துள் ஒன்றாக உள்ளது. இவருக்கு ஏக பாதர் என்பது பெயர். இவர் வலது கரத்தில் தண்டத்தையும், இடது கரத்தில் பல விதமான இலைகளைக் கொண்ட தளிர்க் கொத்தையும் ஏந்தியுள்ளார். அஜைக ஏகபாதர் எனப்படும் இத்தகைய திருவுருவங்கள் ராஜஸ்தானில் பரவலாகக் கிடைக்கின்றன. சுடுமண் சிற்பமொன்று ராஜஸ் தானில் உள்ள பிக்காளிர் (ரங்க மகால்) மியூசி யத்தில் உள்ளது.

ஆட்டுத் தலையும் யானை உடலும் கொண்ட பெண் ஒருத்தியையும் தலபுராணம் காட்டுகிறது. பாண்டியநாட்டுப் பாடல் பெற்ற தலமான திருஆடானைத் தலபுராணத் தில் ஆட்டுத்தலையும் யானை உடலும் கொண்ட வாரிணி என்பவர் சிவபெருமானை வழிபட்டுப் பேறு பெற்றாள் என்று கூறப்பட்டுள்ளது. இதை விளக்கும் சுதைச் சிற்பம் ஒன்று இக்கோயில் கோபுரத்தில் இடம் பெற்றுள்ளது.

இக்கோயிலில் வீற்றிருக்கும் பெருமானுக்கு அஜகஜேஸ்வரர் என்பதும் பெயராகும்.வேதபுருஷரில் சாமவேத புருஷன் ஆட்டுத் தலையுடன் காணப்படுகிறான். வேதத்திற்கும் ஆட்டிற்கும் உள்ள நெருங்கிய தொடர்புகளைப் புராணங்கள் விரிவாகக் கூறுகின்றன.

சோமமண்டலத்தில் சிவத்தியானம்

வானவெளியில் நிர்மலமாகவும், சுத்தமாகவும், பிரகாசமாகவும், குளிர்ச்சியுள்ளதாகவும், நிறைவானதாகவும், சலனமற்றதாகவும் உள்ள சந்திர மண்டலத்தைத் தியானித்து, அதன் நடு வில் மகாதேவனாகவும், பரமானந்த புருஷனாகவும், பார்வதி தேவியைப் பாதியில் வைத்துக் கொண்டு அர்த்தநாரியாகவும், பக்தர்களுக்கு வரத்தை வாரி வழங்குபவராகவும், தோற்றம், இருப்பு, முடிவு இல்லாதவராகவும், சுத்த ஸ்படிகம் போல் பிரகாசமாக இருப்பவரும், சந்திர பிறையைத் தலையில் தாங்கியவரும், முக்கண்ணரும், நீலகண்டரும், நான்கு தோள்களையுடையவருமான பரமாத்னான மகாதேவனை சதாகாலமும் இடைவிடாது தியானிக்க வேண் டும். இப்படிச் செய்பவனின் தேகம் அமிர்தமயமாகி, அவன் அழிவற்றவன் ஆகிறான். அவனைத் துக்கங்கள் அண்டுவதில்லை. எப்போது மகிழ்ச்சி சூழ்ந்திருக்கிறது.

Owned and published by P.S.ATCHILINGAM from 29, Beemanna Mudali Garden Street, Alwarpet, Chennai - 600 018. Printed by V.S.SHANMUGA RAMA SUBRAMANIAN at MASS TYPHOGRAPHIC,11(5A) Poes Road, Teynampet, Chennai- 600018.
Editor: P.S. ATCHILINGAM

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

SivaSunthari - Tamil Monthly
Postal Registration No. TN/CH/(C)/150/11-13
Registered with the Registrar of Newspapers for India under No. TNTAM/2008/25724
Published on 03.05.2013

அன்பர்கள் அனைவருக்கும் இனிய நல்வாழ்த்துக்கள்

சைவசித்தாந்த இரத்தினம்
Dr. V. ஆறுமுகம், (CLRI, Retd.)
சென்னை
R. இராமச்சந்திரன்
நூம்பல், சென்னை

திருப்பணிச் செம்மல், அருட்பணி அரசு
M.V. ஜெய்சங்கர் B.E., (Struc.)
ப.எண்.12, கிருஷ்ணையர் தெரு சிவசுந்தரி
அறக்கட்டளை, எல்விஜெ பில்டர்ஸ், நூங்கம்பாக்கம்,
சென்னை-34. செல் 98410 47790

சிவாலயம். ஜெ. மோகன் மயிலாப்பூர், சென்னை-4.